# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 5    இதழ் : 5    ஆகஸ்ட் 2026



# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

SREE VISALAM CHIT FUND LTD SVCF ESTD 1947 79th YEAR

**1 இலட்சம் சீட்டு முதல் கோடி சீட்டு வரை....**




## ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

80 Celebrating YEARS OF EXCELLENCE • SINCE 1947 •

**நம்பிக்கை, நாணயம், நேர்மை**

நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்

**அனைவருக்கும் நன்றி**

+91 8667003356 | 04565 283 477  WWW.SREEVISALAM.COM

SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

**பதிவு அலுவலகம்:**
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

**நிர்வாக அலுவலகம்:**
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

**மத்திய அலுவலகம்:**
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

உங்கள் குழந்தையின் ஒவியம்...

# நாம் நகரத்தார்

## மின்னிதழ்

# அட்டைப்படமாக

**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு**
**ஒரு சிறப்பு ஓவியப் போட்டி!**




உங்கள் குழந்தையின் கற்பனைத் திறனை வெளிப்படுத்த ஒரு சிறிய வாய்ப்பு... அந்த ஓவியம் 'நாம் நகரத்தார்' மின்னிதழின் அடுத்த இதழ் அட்டைப்படமாக மாறும் ஒரு அரிய வாய்ப்பு!

## ஓவியத்தின் தலைப்பு:

### "ஆசிரியர் – என் பார்வையில்"

ஆசிரியரின் சிறப்பு, ஆசிரியர்–மாணவர் உறவு, ஆசிரியரின் பாசம், வழிகாட்டுதல் அல்லது உங்கள் குழந்தையின் கற்பனையில் ஆசிரியர் எப்படி இருக்கிறார் என்பதைக் கொண்டு ஓவியம் வரையலாம்.

## பரிசும் உண்டு!

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஓவியம் 'நாம் நகரத்தார்' மின்னிதழின் அட்டைப்படமாக இடம்பெறும். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் குழந்தைக்கு சிறப்புப் பரிசு வழங்கப்படும்.

25

**செப்டம்பர் மாதம்**
**25–ஆம் தேதிக்குள்**
**அனுப்பிவைக்கவும்**

அனைத்து குழந்தைகளின் ஓவியங்களும்
வரும் இதழில் இடம்பெறுவதற்கான வாய்ப்பும் உண்டு!

# எப்படி அனுப்புவது?

## உங்கள் குழந்தையின்:

- ஓவியம்
- குழந்தையின் புகைப்படம்
- குழந்தையின் பெயர்
- ஊர்
- பெற்றோர் பெயர்
- தொடர்பு எண்

## ஆகிய விவரங்களுடன்...


WhatsApp மூலம் அனுப்பவும் அல்லது ஓவியத்தை ஸ்கேன் செய்து மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

**96590 32994**
**(WhatsApp)**

அல்லது

**naamnagarathar@outlook.com**


என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.




உங்கள் குழந்தையின் ஓவியம்...

**அக்டோபர் இதழில் அட்டைப்படத்தில்**

வாய்ப்பை தவறவிடாதீர்கள்...
உங்கள் குழந்தையின் திறமையை
உலகிற்கு அறிமுகப்படுத்துங்கள்!




# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

**ஆகஸ்ட் 2026**

மலர் : 5 இதழ் : 5

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.



**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534



கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

சுதந்திரத்தின் 79–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த ஆகஸ்ட் மாதத்தில், நமது மின்னிதழின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

சுதந்திரம் என்பது நமக்கு எளிதாகக் கிடைத்த ஒன்று அல்ல. எண்ணற்ற போராட்டங்கள், சிறைவாசங்கள், தியாகங்கள், உயிர்ப் பலிகள் மற்றும் மக்களின் ஒற்றுமையின் வழியாக நாம் பெற்ற பெரும் வரம் அது.

இந்த சுதந்திரப் போராட்ட வரலாற்றில், செட்டிநாட்டு மண்ணையும் நகரத்தார் பெருமக்களையும் நாம் மறந்துவிட முடியாது. வணிகம், கல்வி, அறப்பணி, கோயில் திருப்பணி என பல துறைகளில் சிறந்து விளங்கிய நம் முன்னோர்கள், தேசம் அழைத்தபோதும் தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர். சிலர் தொழிலை இழந்தனர்; சிலர் குடும்பத்தைப் பிரிந்து சிறை சென்றனர்; சிலர் பொருளாதார இழப்புகளையும் சந்தித்தனர். ஆனால் தேசத்தின் மீதான அவர்களின் பற்றும் மன உறுதியும் தளரவில்லை.

தேவகோட்டை உள்ளிட்ட செட்டிநாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்த நகரத்தார் பெருமக்கள் சுதந்திர இயக்கங்களில் பங்கேற்று, தங்கள் வாழ்க்கையையே நாட்டிற்காக அர்ப்பணித்த வரலாறு நமக்கு பெருமை தருகிறது.


இன்று நாம் சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். தேசியக் கொடியை ஏற்றுகிறோம். சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவு கூருகிறோம். ஆனால், அவர்கள் விட்டுச் சென்ற நேர்மை, உழைப்பு, ஒழுக்கம், அறம், கல்வி, தேசப்பற்று ஆகிய பண்புகளை நமது வாழ்க்கையிலும் தொடர்ந்து காப்பதே அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்.

இந்த சிறப்பான ஆகஸ்ட் இதழில், இந்திய சுதந்திரமும்... நகரத்தாரும்... என்ற கட்டுரையின் மூலம், நமது முன்னோர்களின் தேசப்பற்றையும் தியாகங்களையும் நினைவுகூர்கிறோம். அவர்களின் வரலாறு நமக்கு பெருமை மட்டுமல்ல; நமது அடுத்த தலைமுறைக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் ஆகும்.

இந்த சுதந்திர தினத்தில், நாட்டிற்காக தியாகம் செய்த அனைத்து தியாகிகளையும், குறிப்பாக நமது நகரத்தார் முன்னோர்களையும் நன்றியுடன் நினைவுகூர்வோம்.

அவர்கள் பெற்றுத் தந்த சுதந்திரத்தை மதிப்போம்;
அவர்கள் விட்டுச் சென்ற நல்ல பண்புகளை வாழ்வில்
பின்பற்றுவோம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்



உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்**
**செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
**46/-**
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :
**96590 32994**
எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**


PM
SWITCH TO THE FUTURE
PALLATHUR MOTORS LLP
PETROL RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
ELECTRIC RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
PETROL STATION
ELECTRIFY YOUR JOURNEY NOW
Go far and wide with just a single charge
LECTRIX
Book Your TEST DR!VE Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும் நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது. பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும் நமது மின்னிதழில் தங்கள் நிறுவனம் மற்றும் தங்கள் சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

**ஒரு பக்க விளம்பரத்திற்கான கட்டணம்- ருபாய்: ₹350/- மட்டுமே**

**ஓர் ஆண்டிற்கான (12 இதழ்கள்) விளம்பரத்திற்கான கட்டணம் – ருபயம்: ₹4000/- மட்டும**

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**குறைந்த செலவில் விளம்பரப்படுத்துங்கள்.**

**9659032994**

**naamnagarathar@outlook.com**

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- மனிதநேயம் மரித்துப்போகாத. மானுடம்!
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .......................... 14

**சிறப்புப் பக்கம்**

- இந்திய சுதந்திரமும்... நகரத்தாரும்...
  –உமாராணி சொக்கலிங்கம், நற்சாந்துபட்டி .......................... 21

**பண்பாடு**

- நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம்.... 28

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 44

**கவிச்சோலை**

- தியாகத்தின் விலை... –கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி. ............ 45
- பாசம் தாங்கும் குடும்பம்... –அரு.சிவகாமி இராமனாதன், ஒக்கூர்–நவிமும்பை. .. 61

**சுயமுன்னேற்றம்**

- வெற்றிப்பாதை.. தொடர்.. இராம.சொக்கலிங்கம். .......................... 46

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ............ 53

**சமையல்**


- வீட்டிலேயே ஹோட்டல் சுவை பிரியாணி .......................... 57

**நிதி மேலாண்மை**

- பங்கு சந்தை .......................................... 62

**ஜோதிடம்**

- ஜாதகத்தில் மறைந்திருக்கும் பூர்வ புண்ணிய ரகசியம் –ஜோதிடர் எல்லி .... 85




GET IT ON Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

உ

VALATHI
2005

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு **30%** முதல் **40%**வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம்
2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை
## கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# மனிதநேயம் மரித்துப்போகாத மானுடம்!





– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

"மனிதநேயம்" என்பது இந்த உலகம் உள்ளவரையில் மறையாது. வறுமையில் வாடுவோர்க்கு பணம் படைத்தவர்கள் உதவி செய்வதை விட, வாழ்க்கையில் தங்களின் உழைப்பில் வாழுகின்ற எத்தனையோ மனிதர்கள் மனிதநேயத்தோடு உதவுகின்ற நிலையைப் பார்க்கின்ற போதுதான், மனிதநேயத்தை தூக்கிப்பிடிக்கின்ற அந்த மாமனிதர்களை வணங்கத் தோன்றுகிறது.

கடவுளை நேரடியாக பார்க்க நம்மால் இயலாது. ஆனால் மனித உருவில் சிலரை நாம் கடவுளாகப் பார்க்க முடிகிறது. அதற்குக் காரணம் அவர்களிடம் நிறைந்திருக்கின்ற கருணையும் அன்புமே அடிப்படையாகும். அப்போது தான் "மனிதன் என்பவன் இறைவன் ஆக முடியும்"என்பது உண்மை யாகும்.

இதே கருத்தை வலியுறுத்தி கவியரசர் கண்ணதாசன் அவர்கள் எழுதிய திரைப்படப்பாடல் ஒன்றை இங்கே பதிவு செய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்! வாரிவாரி வழங்கும் போது
வள்ளலாகலாம்! வாழை போல தன்னைத் தந்து தியாகியாகலாம்!
உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்!".

மனிதன் என்பவன் எப்படித் தெய்வமாகலாம்? என்று கேள்வி கேட்போரும் இங்கு உண்டு.அவர்களுக்குச் சொல்லவேண்டிய பதில், ஆபத்தில் மாட்டிக் கொண்டு சிக்கலுக் குள்ளான காலத்தில் பிறருக்கு உதவி செய்யும் போது மனிதன் தெய்வமாகலாம். பசிப்பிணியால் வாடும் ஒருவருக்கு உணவளித்தால்,அந்த மனிதன் தெய்வமாகலாம். இப்படித் தன்னால் முடிந்த உதவிகளை எல்லாம் ஒரு மனிதன் பிறருக்குச் செய்கின்றபோது, அந்த உதவியைப்பெற்றவர் களுக்கு மனிதன் தெய்வமாகத்தெரிகிறான்.

வயது முதிர்ந்த ஏழைத் தம்பதிகளுக்கு, ஒருவர் தெய்வமாகக்காட்சி அளித்தார்."மனிதநேயத்தைப் போற்றிய அந்த மாமனிதனைப்பற்றி இங்கு சிந்திப்போமா! இது முற்றிலும்,நம் பாரத நாட்டில் நடந்த உண்மை நிகழ்வே அன்றி கற்பனை கலந்த கதையல்ல!



மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தாத்தா. அவரோ 93 வயதுக்குச் சொந்தக்காரர். ஏழ்மையின் பிடியில் பல காலம் கட்டுண்டு கிடந்தாலும்,தன் மனைவியின் மீது அன்பும், பாசமும்,தீராத காதலும் கொண்டவர்.

பல ஆண்டுகளாகத்தன் இடுப்பிலே ஒரு "சுருக்குப்பை' ஒன்றை வைத்திருப்பார். அதிலே எப்போதெல்லாம் தன்னிடத்தில் காசு மிஞ்சுகிறதோ,அதை அதிலேபோட்டு, தன் மனைவி அறியாத வகையில் வைத்திருப்பார்.

அவருக்கு, தான் இறப்பதற்கு முன்பாகத் தன்னையே நம்பி தனக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற அன்புள்ளம் கொண்ட மனைவிக்குத்தங்கத்தில் ஒரு "தாலிச்சங்கிலி" வாங்கிக் கொடுத்து விட வேண்டும் என்ற ஆசை மட்டுமே மனமுழுவதும் நிறைந்திருந்தது.

ஒருநாள் தாத்தா சற்று நோய்வாய்ப்பட்டு படுக்கையில் படுத்து இருந்தார். அவருக்கு இடுப்பிலே ஒத்தடம் கொடுப்பதற்காக,அவரது மனைவி தள்ளாத வயதிலும்,துணி ஒன்றை சுடுநீரில் நனைத்து எடுத்துக் கொண்டு, தாத்தாவின் இடுப்பிலே ஒத்தடம் கொடுப்பதற்காக கையை வைத்தார்.

அப்போது தாத்தாவின் சுருக்குப்பை கையிலே அகப்பட்டது. அது என்ன? என்று பாட்டி கேட்க, தாத்தா சொன்னார்,"அதைத் தொடாதே!அதிலே என் உயிர் உள்ளது"என்றார். அப்படியா? என்று பாட்டி கேட்க,தாத்தா சொன்னார், "கண்ணே,நான் கண் மூடுவதற்கு முன்பு,என் உயிராகிய உனக்கு ஒரு தங்கச்சங்கிலியாவது வாங்கிப்போட்டுவிட, எண்ணி அதற்காக அந்தச்சுருக்குப்பையில் காசு சேர்த்து வைத்துள்ளேன்" என்றார்.

அதைக்கேட்டதும் பாட்டி சொன்னாள்,"தங்கத்தில் தாலி செஞ்சு போட்டுக் கொள்ள வேண்டாமே! தங்கமான கணவராக நீங்கள் என்னோடு வாழும் பொழுது,தங்கம் எனக்கு எதற்கு? அன்பும், உண்மையும் கலந்த தங்கமான நீங்கள் என்னுடன் இருக்க, கடைத் தங்கம் ஏன்? தேவை இல்லை என்றார் பாட்டி.

இதைச்சொல்லிவிட்டு அடுத்ததாக ஒன்று சொன்னார் பாட்டி. எனக்கும் ஒரு ஆசை உண்டு, "அது உங்களுக்கு முன்பு "சுமங்கலியாக" நான் போய்ச்சேர்ந்துட்டா, அதுவே போதும் என்றாள் பாட்டி.

வயது முதிர்ந்த அந்த இருவருக்குள்ளும், இருந்த அந்தப்புரிதலும், காதலும் தான் தெய்வீகமானது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

"காடு வா வா!வீடு போ போ!" என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த அந்தத்தாத் தாவுக்கு, தன் மனைவிக்கு எப்படியாவது தங்கத்தில் தாலி வாங்கி போட்டு விடவேண்டும்" என்ற வைராக்கியம் மட்டும் மாறவேயில்லை.

அதற்காக அந்தத்தாத்தா தள்ளாத வயதிலும், பாடு பட்டுச் சேர்த்து வைத்த பணத்தை எடுத்துக் கொண்டு தன் மனைவியைக்கூடவே அழைத்துக் கொண்டு அவுரங்காபாத்தில் உள்ள "கோபிகா ஜுவல்லர்ஸ்" என்ற ஒரு நகைக்கடைக்கு சென்றார்.

தாத்தாவிற்கோ தங்கத்தின் விலைபற்றி எதுவுமே தெரியாது. அந்த ஏழைத்தாத்தா என்ன இதற்கு முன்பு அடிக்கடி நகைக்கடைக்குச் சென்று நகை வாங்கி இருந்தால் அல்லவா தங்கநகை விலைபற்றித் தெரிவதற்கு! அந்தத்தாத்தாவின் சுருக்குப்பையில் இருந்த பணத்தின் மதிப்பு 1120 ரூபாய் மட்டுமே.அதுவும் கடைக்கு வந்தபின்னர் எண்ணியதால் தெரிந்தது. நமக்கோ அது சிறிய தொகையாகத் தெரியும் ஆனால் அந்த 1120 ரூபாய் அந்தத் தாத்தாவுக்கு இலட்சத்திற்குச்சமம்.



தாத்தாவும் பாட்டியும் ஒரு நகையைத் தேர்ந்து எடுத்து அதை நகைக்கடை உரிமையாளரிடம் நீட்டும் போது, தனது சுருக்குப் பையையும் சேர்த்தே தருகிறார். அந்த நகைக்கடை உரிமையாளர் "ஐயா நீங்க வைத்திருக்கும் பணம் தாலி வாங்க பத்தாதுனு " சொல்கிறார்.

உடனே அந்த தாத்தா அதிர்ச்சியாகி "அப்படியா நான் செலவுக்கும், ஊர் போவதற்கும் சேர்த்து வைத்திருக்கிற பணத்தை எல்லாம் தருகிறேன்!' என்று அவர் வைத்திருந்த இன்னொரு சுருக்குப் பையை எடுக்கிறார். அதில் இருந்த 10 ரூ, 20 ரூபாய் நோட்டுகளை எல்லாம் எடுத்துக் கொடுக்கிறார் அந்தத் தாத்தா.

இதை நன்கு கவனித்த அந்த நகைக்கடையின் உரிமையாளர் அந்த வயதான தம்பதிகளின் வெகுளித்தனமான அந்த காதலைப்பார்த்து "ஐயா நீங்க வைத்திருக்கிற காசை எல்லாம் கொடுத்தாலும் இந்த தாலியோட விலைக்கு அந்தக்காசு பத்தாது, இருந்தாலும் நான் உங்களுக்கு இந்த தாலியை உங்கள் மகனாக நினைத்து அன்பளிப்பாக தருகிறேன்" என்று சொல்லி தாத்தாவிடம் கொடுக்கிறார்.

ஆனால் அதற்கு அந்தத் தாத்தா மறுத்துவிடுகிறார். இந்தத்தாலியை சும்மா வாங்க என்னால் முடியாது. என்னிடம் இருக்கும் பணத்தை எல்லாம் தந்து விட்டேன். அதை நீங்கள் வாங்கி கொள்ளுங்கள் என்று சொல்லி கடை உரிமையாளரிடம் மீண்டும் கொடுத்து விடுகிறார்.

"சரிதாத்தா! இப்போது என்ன? நான் உங்களிடம் காசு வாங்கனும்! அவ்வளவுதானே" என்று கூறிவிட்டு, அந்தத்தாத்தா கொடுத்த பணத்தில் ஒரே ஒரு 20 ரூபாய்த்தாளை மட்டும் வாங்கிக்கொண்டு அந்தத்தங்க தாலியை அன்பாக கொடுத்து அனுப்புகிறார் அந்த நகைக்கடை உரிமை யாளரான "நிலேஷ் கிவான்ஸரா."

இன்றைக்குப் பல நகைக்கடைகளில் ஏழைகளாகத் தெரிகிறவர்கள் உள்ளே நுழைந்தாலே ஒரு மாதிரியாக,மரியாதை குறைவாகப் பார்ப்பார்கள். அதுவும் இந்த மாதிரி நகை வாங்கி அதற்கு பில்போட்ட பிறகு, பணம் குறைவாக உள்ளதே என்று சொன்னால்,கடைக்காரர்கள், "வெளியே போ!"என்று அடிக்காத குறையாக வெளியே பிடித்து தள்ளி விடுவார்கள்.

வந்தவரோ பரமஏழை! அவரிடம் போதிய பணமில்லை! ஆனால் ஏமாற்றும் எண்ணம் அவரிடம் சிறிதுமில்லை. நகையை இலவசமாக பெற்றுக் கொள்ள மனமில்லை. அந்த நகைக்கடக்காரர் அந்த வயதான தம்பதியரிடம் நடந்து கொண்ட விதமும், அவர்கள்பால் காட்டிய மனித நேயமும் மகத்தானது என்பது மட்டுமல்ல நண்பர்களே!

இன்னும் இந்த நாட்டில், மனிதநேயம் என்பது மனிதர்களிடம் மரித்துப் போகவில்லை என்பதைக் காட்டுகிறது.

அந்த தங்கத்தாலியை அன்பளிப்பாகத்தந்து, மகிழ்ந்தாரே, அந்த மனிதன் தான் அந்த வயதான தம்பதியர்கள் கண்ட "மனிததெய்வம்".

இதுபோன்ற நிகழ்வுகள் தான், "மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!' என்பதற்கு ஆகச்சிறந்த உதாரணமாகும். ஒருவன் வந்து தன்னிடம் எதுவுமே இல்லை, மிகவும் துன்பத்தில் உள்ளேன் என்று சொல்வதற்கு முன்பே அவர்களுக்கு உதவி செய்கின்ற குணம் படைத்தோரே, இந்த நானிலத்தில் கடவுளுக்குச் சமம். நண்பர்களே!



இயன்றவரை இந்த பூமியில் அன்பை விதையுங்கள்!
ஆதரவு காட்டுங்கள்! கருணை புரியுங்கள்!
காலம் உங்களைக் கொண்டாடும்!
இதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! என்ன சரிதானே?

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

# ஸ்ரீ நித்யகல்யாணி
## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

1983-2026 44TH ANNIVERSARY

Our Culture is Financial Discipline.

Money is Easier when your Proactive Plan with Nithyakalyani Chit Funds...




## OUR BRANCHES

| | |
|---|---|
| Madurai Main 98430 93250 | Arasaradi / Mdu 73391 25777 |
| Dindigul 98432 91652 | Erode 75581 99888 |
| AnnaNagar / Mdu 98432 91653 | Aruppukkottai 73589 91777 |
| Trichy 98432 91654 | Thirunagar / Mdu 84899 10191 |
| Reserveline / Mdu 98430 93256 | Srivilliputhur 70944 61192 |
| Coimbatore 82200 52338 | Pollachi 70923 00882 |

Call : 0452-2692680, 9786300304 / E.Mail : sncfco@gmail.com

# இந்திய சுதந்திரமும்... நகரத்தாரும்...



–உமாராணி சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி



"ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது அதன் எல்லைகளின் விடுதலை மட்டுமல்ல; அந்த நாட்டின் மக்களின் மனங்களும், சிந்தனைகளும், எதிர்காலமும் விடுதலை பெறும் தருணமாகும்."



என்ற 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15. இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாள். இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்த இந்தியா, எண்ணற்ற போராட்டங்கள், தியாகங்கள், சிறைவாசங்கள், உயிர் பலிகள் மற்றும் மக்களின் ஒற்றுமையின் பலனாக சுதந்திரக் காற்றை சுவாசித்தது. அந்த விடியலின் பின்னால் மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய பாரதியார், தீரர் சத்தியமூர்த்தி, திருப்பூர் குமரன், ராஜாஜி, காமராஜர் போன்ற தலைவர்களின் ஒளிமிகு பங்களிப்புகள் இருந்ததுபோல, நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான அறியப்பட்ட மற்றும் அறியப்படாத வீரர்களின் அமைதியான தியாகங்களும் இருந்தன.

அந்த வீரர்களின் பட்டியலில், செட்டிநாட்டு மண்ணைச் சேர்ந்த பல நகரத்தார் பெருமக்களும் இடம் பெற்றிருப்பது, நமது சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் வரலாற்றுச் செய்தியாகும்.


நகரத்தார் சமூகத்தைப் பற்றி பேசும்போது, முதலில் நினைவிற்கு வருவது வணிகத் திறமை, நேர்மை, நம்பிக்கை, கல்வி, அறப்பணி, கோயில் திருப்பணிகள் ஆகியவையே. ஆனால், அந்த அடையாளங்களுக்குப் பின்னால் இன்னொரு முகமும் இருந்தது. அது தேசப்பற்று.



ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக இந்தியா முழுவதும் தேசிய உணர்வு எழுச்சி பெற்ற காலத்தில், செட்டிநாட்டிலும் அதன் தாக்கம் ஆழமாகப் பரவியது. மகாத்மா காந்தியின் சிந்தனைகள், சுதேசி இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம், "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் போன்ற தேசிய இயக்கங்கள், நகரத்தார் இளைஞர்களையும் பெரிதும் ஈர்த்தன.



வணிகத்தில் நிலையான வாழ்க்கை வாழ்ந்த பலர், தேசத்தின் சுதந்திரமே தனிப்பட்ட வாழ்க்கையை விட உயர்ந்தது என்ற உணர்வுடன் தேசிய இயக்கங்களில் இணைந்தனர். சிலர் தங்கள் தொழிலை இழந்தனர். சிலர் குடும்பத்திலிருந்து பிரிந்து சிறை சென்றனர். சிலர் பொருளாதார இழப்புகளைச் சந்தித்தனர். ஆனால், அவர்களின் மன உறுதியை எந்தத் துன்பமும் தளரச் செய்யவில்லை.



செட்டிநாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான தேவகோட்டை, சுதந்திரப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. தேசிய இயக்கங்களின் தாக்கம் இங்கு ஆழமாக இருந்ததுடன், பல நகரத்தார் குடும்பங்கள் தேசப்பணியில் நேரடியாகப் பங்கேற்றன.

அந்த வீரர்களில் திரு. டி. ஆர். அருணாசலம் செட்டியார்,
திரு. சின்ன அண்ணாமலை செட்டியார்,
திரு. இராம. அண்ணாமலை செட்டியார்,
திரு. அள. சுப. பழ. சுப. திருநாவுக்கரசு செட்டியார்,
திரு. தினமணி செட்டியார்,
திரு. ஆர். சி. அண்ணாமலை செட்டியார்,
திரு. காந்தி நாராயணன் செட்டியார்
ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கேற்று, ஆங்கிலேய அரசின் அடக்குமுறையை அஞ்சாமல் எதிர்கொண்ட இவர்கள், சிறைத் தண்டனைகளையும் அனுபவித்தனர். சுதந்திரம் என்பது பேசுவதற்கான கொள்கை அல்ல; வாழ்வில் செயல்படுத்த வேண்டிய கடமை என்பதை அவர்கள் தங்களது வாழ்க்கையால் நிரூபித்தனர்.


தேவகோட்டையுடன் மட்டுமல்லாமல், செட்டிநாட்டின் பிற பகுதிகளிலும் விடுதலை உணர்வு பரவியிருந்தது.

பள்ளத்தூரைச் சேர்ந்த திரு. சுப. அருணாசலம் செட்டியார்,
கண்டவராயன்பட்டியைச் சேர்ந்த தொண்டர் நா. அருணாசலம் செட்டியார்,
காரைக்குடியைச் சேர்ந்த திரு. ஆறு. ஆ. இராம. சொக்கலிங்கம் செட்டியார்

ஆகியோரும் தேசிய இயக்கங்களில் பங்கேற்று, சுதந்திரப் போராட்டத்திற்கு தங்களது பங்களிப்பை வழங்கினர். இவர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும், நாட்டுப்பற்று என்பது ஒரு சிந்தனை மட்டுமல்ல; அது செயலில் வெளிப்பட வேண்டிய உயரிய பண்பு என்பதைக் காட்டுகிறது.



காரைக்குடியின் பெருமைமிகு ஆளுமைகளில் ஒருவரான கம்பன் அடிப்பொடி சா. கணேசன், தேசப்பற்றும் தமிழ்ப்பற்றும் ஒன்றாக வாழ்ந்த தலைசிறந்த மனிதர். மகாத்மா காந்தியின் அழைப்பால் ஈர்க்கப்பட்டு இந்திய தேசிய காங்கிரசில் இணைந்த அவர், தனிநபர் சத்தியாகிரகம் மற்றும் "வெள்ளையனே வெளியேறு" இயக்கங்களில் பங்கேற்று சிறைத் தண்டனையையும் அனுபவித்தார்.





விடுதலைக்குப் பிறகு அரசியல் அதிகாரத்தை நாடாமல், தமிழ் மொழிக்கும் கம்பராமாயணப் பாரம்பரியத்திற்கும் தன்னை அர்ப்பணித்தார். அவர் நிறுவிய கம்பன் கழகம், இன்றளவும் தமிழ் இலக்கிய உலகின் பெருமைக்குரிய அமைப்பாகத் திகழ்கிறது.

நகரத்தார் சமூகத்தின் பெருமை, செல்வம் ஈட்டியதிலோ, உலகம் முழுவதும் வணிகம் செய்ததிலோ மட்டும் இல்லை. தேசம் அழைத்த போது தேசத்திற்காக நின்றதும், சமூகம் தேவைப்பட்டபோது கல்விக்காகவும் அறப்பணிக்காகவும் தங்களை அர்ப்பணித்ததுமே அவர்களின் உண்மையான அடையாளமாகும்.

ஒருபுறம் விடுதலைப் போராட்டத்தில் தியாகிகளை உருவாக்கிய சமூகமாகவும், மறுபுறம் கல்வி, கோயில் திருப்பணி, மருத்துவம், தர்மம் ஆகிய துறைகளில் நாட்டை வளப்படுத்திய சமூகமாகவும் நகரத்தார் மரபு விளங்குகிறது. இந்த இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த வரலாறுகளாகும்.

# இன்றைய தலைமுறைக்கு ஒரு அழைப்பு

இன்று நாம் சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். தேசியக் கொடியை ஏற்றுகிறோம். வீரர்களை நினைவுகூருகிறோம். ஆனால், அவர்களின் தியாகத்தின் அர்த்தத்தை நம் வாழ்க்கையில் உணர்கிறோமா?



நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற மிகப்பெரிய சொத்து நிலமோ, செல்வமோ அல்ல; நேர்மை, உழைப்பு, ஒழுக்கம், அறம், கல்வி, தேசப்பற்று ஆகிய உயரிய பண்புகளே.


அவற்றை பாதுகாப்பதும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதும் நமது பொறுப்பாகும். ஏனெனில் வரலாற்றை மறக்கும் சமூகம் தனது எதிர்காலத்தையும் இழக்கும்; வரலாற்றை மதிக்கும் சமூகம் மட்டுமே புதிய வரலாறுகளைப் படைக்கும்.



சுதந்திரத்தின் 79–ஆம் ஆண்டை நோக்கி நாம் பயணிக்கும் இந்த வேளையில், நமது நகரத்தார் விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நன்றியுடன் நினைவுகூர்வோம். அவர்கள் நமக்கு அளித்த சுதந்திரத்தை மதித்து, அவர்கள் காட்டிய நேர்மை, துணிவு, தன்னலமற்ற சேவை ஆகியவற்றை நம் வாழ்விலும் பின்பற்றுவோம்.

அதுவே அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்.

"ஒரு சமூகத்தின் பெருமை அதன் செல்வத்தில் இல்லை; தேசத்திற்காக அது செய்த தியாகத்தில்தான் உள்ளது."




நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்


Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram





முனைவர்
நா.வள்ளி சொக்கலிங்கம்
மேனாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

# நகரத்தாரின் அறப்பணிகள்

"வண்மையே குலதர்மமெனக் கொண்டவர்கள்" என்று மகாகவி பாரதியால் பாராட்டப்பெற்ற நகரத்தார்கள் பல கோடி மக்கள் வாழும் பாரதநாட்டில் சிறுபான்மைச் சமூகத்தினராவர். இருப்பினும் அவர்கள் தாங்கள் செய்த அறப் பணிகளால் உலகமே அறிந்தவர்களாக விளங்குகின்றார்கள்.

சிவகங்கை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுமாக முன்பு 96 ஊர்களிலும் தற்போது 74 ஊர்களிலும் வசிக்கும் நகரத்தார்கள் 'சிவ மதத்திலேயே இருக்கிறது என்ற கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்கள். சிவன் கோயிலை அடிப்படையாகக் கொணடு ஒன்பது கோயில் பிரிவினராக வாழ்ந்து வருகிறார்கள்.

18,19 ஆம் நூற்றாண்டுகளில் முதலில் உப்பு, பஞ்சு, துணிமணிகள், அரிசி ஏற்றுமதி முதலிய வணிகங்களைச் செய்தனர். பிறகு கொடுக்கல் வாங்கல் தொழிலிலும் ஈடுபட்டனர். கி.பி.1801 ஆம் ஆண்டு வாக்கில் சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களுக்குச் சென்று தொழில் புரிந்தனர்.

வட இந்திய நாடுகளில் மட்டுமல்லாமல், கீழ்த்திசை நாடுகளிலும் நகரத்தார்கள் வணிகத் தொடர்பு கொண்டனர். 18,19 ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள் பல ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கீழ் இருந்தமையாலும், அந்நியச் செலாவணி முறை எளிதாக இருந்தமையாலும், இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் சீனா முதலிய நாடுகளுடன் நகரத்தார்கள் வணிகத் தொடர்பு கொண்டு அந்தந்த நாடுகளையும் வளப்படுத்தித் தாங்களும் பெரும் பொருள் ஈட்டினர். ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப் பணமென எடுத்துவைத்து, அதைக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அறப்பணிகள் ஆற்றினர். செல்வம் ஈட்டி, சிக்கனமாக வாழ்ந்து அறப்பணிகள் ஆற்றுவதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

### நகரத்தார்களும் அறப்பணிகளும் :

சமயத் தொடர்பானவைகளுக்கோ அல்லது சமூக நலங்கருதியோ பணமோ தாவர சொத்தோ சங்கம சொத்தோ கொடுப்பதை இந்தியாவில் பண்டைக் காலமுதல் சிறந்ததோர் அறமாகக் கருதி வந்திருக்கிறார்கள். சமுதாயத்திற்கு தேவையான தொண்டுகளைச் செய்தல் அந்நாளில் புண்ணியம் பயப்பவை என்று கருதப்பட்டன.

'சகல தேவாலயம் மடாலயம் திருப்பணிகள்
சத்திரம் தண்ணீர் குளஞ் சாலை முதல்
எண்ணான்கு தருமும் இயற்றும் சீலர்'

என்று 'நகரத்தாரென்னுந் தனவைசியர் பஞ்சரத்னம் என்ற நூல் கூறுகிறபடி நகரத்தார்கள் காலத்திற்குத் தேவையான அறப்பணிகளைச் செய்து ஈதல், இசைபட வாழ்தல் என்ற கொள்கையோடு வாழ்ந்தார்கள்.

நகரத்தார்கள் செய்த சமயப்பணிகள், சமுதாயப்பணிகள், கல்விப்பணிகள், மொழிப்பணிகள் ஆகியவை வரலாற்றில் நிலைத்த இடம் பெறுபவை.



## கோயிற் பணிகள் :

ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை யுடையவர்கள் நகரத்தார்கள், போக்குவரத்துவசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் தொழில் முறையின் பொருட்டு பாய்மரக் கப்பல்களில் அயல்நாடுகளுக்குச் சென்றார்கள். தங்கள் பெண்டு பிள்ளைகளைப் பிரியும்போது திரும்ப வருவோமோ மாட்டோமோ என்ற நினைவில் உலக நிலையாமையை உணர்ந்து இங்கிருந்து புறப்படும்போதே உறவினரிடம் வாய்க்கரிசி வாங்கிக்

கொண்டு சென்றார்கள். தாங்கள் அயல்நாடுகளுக்குச் சென்று பொருளீட்டுகிறபோது அங்கு தங்களையும், தாங்கள் ஊரில் இல்லாத போது தங்கள் குடும்பத்தையும் தெய்வம்தான் காத்தது என்று உறுதியாக நம்பினார்கள். அதனால் அந்த நம்பிக்கையின் முதற்கட்டமாக உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் கோயில் திருப்பணிகள் செய்தனர்.

மேலும் சமுதாய மையங்களாக விளங்கிய ஆலயங்கள் அந்நியர் ஆட்சியில் பேணுவாரின்றிக் கிடந்தன. பாடல் பெற்ற தலங்கள் பல சிதலமடைந்தும், பூசை முதலியன சரிவர நடைபெறாமலும் இருந்தன. கோயில்களில் பூசை முதலிய வழிபாடுகள் தடைப்பட்டால் ஏற்படும் கேட்டை,

"முன்னவனார் கோயிற்பூசைகள் முட்டிடின்
மன்னர்களுக்குத் தீங்குள வாரி வளங் குன்றும்
கன்னங் களவு மிகுந்திடும் காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே"

என்று திருமந்திரம் கூறுகிறது. எனவே நகரத்தார்கள் கோயில்களில் முறையான வழிபாடு நடைபெறவும், நாடு வளம் பெறவும் கோயில் திருப்பணிகளை விரும்பி மேற்கொண்டனர். "ஒரு நாட்டுக்குக் கோட்டைக்காப்பு வீரர்கள் இருப்பதுபோல இந்து சமயம் என்னும் கோட்டைக்கு நகரத்தார்கள் கோட்டைக் காப்பு விரர்களாக இருந்து வருகிறார்கள்" என்று காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர சுவாமிகள் நகரத்தார்களைப் பாராட்டுவார்.

நகரத்தார்களைக் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுத்தியவர் கோவிலூர் மடத்தின் முதல் மடாதிபதியாக விளங்கிய 'கோவிலூர் ஆண்டவர்' என்னும் முத்துராமலிங்க ஞானதேசிகராவார்.

"மடமுண்டோ சிவாலயங்கள் மிகுதியுண்டோ
வாசிட்டம் படிப்பதுண்டோ மனத்துள் ஞானத்
திடமுண்டோ நால்வர் தமிழ் படிப்பா ருண்டோ
திவ்வியமாம் உதாரமுதற் குணங்களுண்டோ
விடமுண்டோன் அடியார் குழாம் மிகுதியுண்டோ
மெய்யறம் சத்திரம் விரைப்பூங்காவுமுண்டோ
வடகைலைக்கு இறைவனெனும் முத்துராம
வள்ளல் திருக்கழனிநகர் வாராமுன்னம்"

என்ற சேந்தணி பழனியப்பய்யாவின் பாடல், நகரத்தார்களின் திருப்பணிக்கு கோவிலூர் ஆண்டவர் ஊன்றுகோலாக விளங்கியதை எடுத்துக் கூறுகிறது. அவரைத் தொடர்ந்து கோவிலூர் மடத்தைச் சேர்ந்த மெய்யப்பய்யா, குட்டைய அய்யா, கோவிலூரின் ஐந்தாவது பட்டமான வீரப்ப சுவாமிகள் என்னும் திருக்களர் ஆண்டவர் போன்றோர் நகரத்தார்களைக் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுத்தினர்.

சுமார் 200 பாடல் பெற்ற தலங்களில் திருப்பணிகள் செய்துள்ள நகரத்தார்கள் தாங்கள் குடியேறிய ஊர்களில் சிவன்கோவில்கள் இல்லாவிட்டால் புதிதுற அமைத்துள்ளனர்.

"யாதொரு தெய்வங் கண்டீர் ஆங்கு அத் தெய்வமாகி
மாதொரு பாகனார் தாம் வருகுவர்"

என்றபடி, சிவனடியார்களாகிய நகரத்தார்கள் சமயக்காழ்ப்பு இல்லாமல் வைணவக் கோயில்களிலும், தாங்கள் வசிக்கும் பகுதியில் அய்யனார் கோயில் போன்ற கிராம தேவதைகளின் கோயில்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

காசி முதல் இராமமேச்வரம் வரை நகரத்தார்களின் கோயிற்பணிகள் காணப்படுகின்றன. காசியம்பதியில் தேவார ஓசை இன்றும் கேட்கப்படுவதற்கு நகரத்தார்களே காரணம். கல்கத்தா, காசி, கயை, அயோத்தி, நாசிக் பஞ்சவடி போன்றவை நகரத்தார்கள் திருப்பணி செய்த வட நாட்டுத்தலங்களுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நகரத்தார்கள், தாங்கள் தொழில்புரியச் சென்ற அயல்நாடுகளிலும் கோயில்களைக் கட்டினர். அக்கோயில்கள் பெரும்பான்மையும் முருகன் கோயில்களே.

இலங்கை, பர்மா, வங்காளதேசம், மலேசியா,சிங்கப்பூர், தாய்லாந்து வியட்நாம், இந்தோனேசியா, மொரீஷியஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற உலக நாடுகள் பலவற்றிலும் நகரத்தார்களின் கோயில் பணிகளைக் காணலாம். சைவ சமயம் கடல்கடந்து

பரவியதற்கும் கோயிற்கலைகள் அங்கெல்லாம் நிலைத்திருப்பதற்கும் நகரத்தார்கள் உறுதுணையாக விளங்கினர்.

தொன்னூற்றாறூர் நகரத்தார்களில் தேவகோட்டை நகரத்தார்கள் அதிகமாகக் கோயில் திருப்பணிகள் செய்துள்ளனர். ஒன்பது கோயில் நகரத்தார்கள் என்று பார்க்கும்போது இலுப்பைக்குடி நகரத்தார்கள் முன்னணியில் நிற்கிறார்கள். நகரத்தார்கள் அனைவருமே ஏதேனும் ஒரு வகையில் கோயிற் பணிகளில் தொடர்புடையவர்களாக இருப்பதால் அனைவரையும் குறிப்பிட்டுச் சொல்வது என்பது இயலாததொன்றாகும். அதனால் ஒரு சிலதிருப்பணிச் செல்வர்களை மட்டும் இங்கு காணலாம்.

அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் பாண்டிநாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் பதினான்கிலும் திருப்பணி செய்ய விரும்பி மதுரை, திருப்பரங்குன்றம், திருவாப்பனூர்,திருப்புத்தூர், திருமுதுகுன்றம், சீர்காழி, பல்லவனீச்சுவரம் போன்ற தலங்களைத் திருப்பணி செய்தனர். 1878இல் வயிநாகரம் நாகப்பய்யா அவர்கள் மதுரைத் திருப்பணியை 25 இலட்ச ரூபாய் செலவில் செய்திருக்கிறார்கள். நகரத்தார்களால் மிகப் பெரிய அளவில் செய்யப்பட்ட முதல் திருப்பணி இதுவேயாகும்.

கானாடுகாத்தான் சா.ராம. குடும்பத்தினர், சிதம்பரத்தில் 30 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்தனர். மேலும் திருவேட்களம், திருவானைக்கா, கருவூர், திருச்சித்ரகூடம் முதலிய தலங்களிலும் பெரும்பணி செய்தனர்.

இராமேசுவரம், காளையார் கோயில் போன்ற தலங்களில் தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தாரின் திருப்பணிகளைக் காணலாம். தேவகோட்டை சத்திரத்து வீட்டார் எனப்படும் ராம. அரு. அரு. குடும்பத்தார் பனிரெண்டுக்கும் மேற்பட்ட தலங்களில் திருப்பணி செய்துள்ளனர். காஞ்சிபுரம் ஏகாம்பரரேசுவர் கோயில் திருப்பணி செய்த தேவகோட்டை ராம.மெ.அ. குடும்பத்தார், மாயூரம் திருப்பணியில் ஈடுபட்ட அழ.வீர.பெ. வீர.குடும்பத்தார், திருக்காளத்தியில் திருப்பணி செய்த மெ. அரு. குடும்பத்தார் போன்றோரும், திருவண்ணாமலைத் திருப்பணியில் பெரும் பங்கு கொண்ட கோட்டையூர் அ.க.ராம. அரு.குடும்பத்தார், திருப்பாதிரிப்புலியூரில் திருப்பணி செய்த கடியாபட்டி தீ. சொ. தீ. நா. குடும்பத்தார் ஆ.தெக்கூர் கருமுத்து குடும்பத்தார், திருக் கொள்ளம்புதூர் திருப்பணியை மேற்கொண்ட நச்சாந்துபட்டி பெ.ராம.ராம. குடும்பத்தார் போன்ற பலர் கோயிற்பணி செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இன்றைய நிலையிலும் குடமுழுக்குச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**சமயஞ் சார்ந்த சமுதாயப்பணிகள் :**

கோயில் திருப்பணிகளோடு அக்கோயில்களை ஒட்டி ஊருணிகள், நந்தவனங்கள், பசுமடங்கள், அன்னதான மடங்கள், திருவாசக மடங்கள், அறுபத்து மூவர் மடங்கள் போன்ற பல்வேறு வகை மடங்கள், சத்திரங்கள், நகர விடுதிகள், வேத, ஆகம, பாட சாலைகள் ஆகியவற்றையும் நகரத்தார்கள் ஏற்படுத்தினர்.

எந்த அறப்பணியை நகரத்தார் செய்தார்களோ அந்த அறப்பணியின் பெயரால் திருப்பணி செய்த குடும்பத்தார் அழைக்கப்படுவதைக் காணலாம்.

பசுமடத்தார் விடு, தண்ணீர் பந்தலார் வீடு, சத்திரத்தார் வீடு, கோயில் செட்டியார் வீடு, மடத்துச் செட்டியார் வீடு, பெருமாள் கோயிலார் வீடு, தோப்புக்கார வீடு, கார்த்திகை மடத்தார் வீடு, பாடசாலையார் வீடு, பள்ளிக் கூடத்தார் வீடு என்று அழைக்கப்படுகின்ற குடும்பங்கள் செட்டிநாட்டில் மிகப் பல.



## நகரத்தாரின் கல்விப்பணிகள் :

கோயிற்பணிகளில் சிறந்து விளங்கிய நகரத்தார்கள் காலத்திற் கேற்றவாறு பிற அறப்பணிகளையும் அவற்றுள் தலையாயது கல்விப் பணியாகும். மேற்கொண்டனர்

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று கல்வித்தருமத்தின் மேன்மையை எடுத்துச் சொல்கிறார் மகாகவி. முதலில் கோயில்களையொட்டி வேத, ஆகம, தேவாரப் பாடசாலைகள் நிறுவி சமயஞ் சார்ந்த கல்விப் பணி புரிந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு வந்த கிறித்துவப் பாதிரிமார்கள் கிறித்துவ சமயக்கல்வியை மக்களிடையே பரப்பி வந்தார்கள். அதனால் அநேகர் கிறித்துவர்களாக மாறினர். அதைக்கண்ட நகரத்தார்கள் சமயக்கல்வியை குறிப்பாக சைவசமயக் கல்வியை பரப்புவது அவசியம் என்று நினைத்து, சமயக் கல்வியைப் புகட்டும் பாடசாலைகளை நிறுவினர். இப்பாட சாலையில் பயின்ற சிறார்கள் வேதாந்த சித்தாந்தங்களை அறிந்தனர். தேவார திருவாசகங்களை இன்னிசையோடு பாடிப்பழகினர்.தாங்கள் கற்றவற்றை கோயில்களில் பாராயணம் பண்ணியும் வந்தனர்.

பாடசாலைகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு உண்டி, உடை, உறையுள் ஆகிய வசதிகளை நகரத்தார்கள் செய்து கொடுத்தனர். கோவிலூர், திருக்களர்,காளையார் கோயில் போன்ற சுமார் 50 தலங்களில் வேதபாட சாலைகளையும், மதுரை, திருக்களர், தில்லை, திருப்பெருந்துறை, காளையார் கோயில் போன்ற சுமார் 12 தலங்களில் தேவாரப்பாடசாலைகளையும் நிறுவினர்.

பிறகு, காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சாதிசமய வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் கற்பிக்கும் கல்வியே தேவை என்று அறிந்து மேனாட்டார் கல்விமுறையைப் பின்பற்றிக் கல்வி நிலையங்களைத் தோற்றுவிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

மேலைச் சிவபுரியில் 1909 இல்தொடங்கப்பட்ட 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும்,1912இல் கோனாபட்டில் நிறுவப்பட்ட கற்பக விநாயகர்' கலாசாலையும், 1913இல் காரைக்குடியில் நிறுவப்பட்ட ஆங்கிலக் கல்வியோடு கூடிய, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலையும்,

1915ல் சிதம்பரத்தில் நிறுவப்பட்ட இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளியும், 19179 காரைக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ மீனாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் அதே ஆண்டில் கடியாபட்டியில் நிறுவப்பட்ட "பூமிசுவரர் இலவச உயர்நிலைப் பள்ளியும்" 'சித்தி விநாயகர் கலாசாலையும்'1926இல் நேமத்தான் பட்டியில் நிறுவபட்ட திருநாவுக்கரசர் வித்தியாசாலையும்", 1930இல் ஆவினிப்பட்டியில் தோன்றிய விவேகானந்தர் கல்விக் கழகமும், வேந்தன்பட்டி, திருவள்ளுவர் செந்தமிழ்க் கலாசாலையும், 1932இல் ஆரம்பிக்கப்பட்ட புதுவயல் 'சரசுவதி வித்தியா சாலையும்', 1935இல் கொப்பனாபட்டியில் ஏற்படுத்தப்பட்ட பெண்களுக்கான 'கலைமகள் கலாசாலையும்' நகரத்தார்களால் ஆரம்ப காலத்தில் நிறுவிய பள்ளிகளுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

செட்டிநாட்டுப் பகுதிகளில் உள்ள பெரும்பான்மையான பள்ளிகள் நகரத்தார் உருவாக்கியவையே, காரைக்குடி செக்காலைப் பகுதியைச் சேர்ந்த காந்தி மெய்யப்பர் 1927இல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தொடங்கிய காலத்திலேயே "இராமநாதன் கலாசாலை" என்ற பெயரில் ஒரு பாட சாலையையும் காரைக்குடிக் கழனிவாசல் பகுதியில் "காந்தி பாடசாலை" என ஒரு பாடசாலையையும் ஆதி திராவிடக குழந்தைகளின் கல்விக்காக ஏற்படுத்தினர். காந்தி மெய்யப்பரைப் போலவே காந்தியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பிச்சப்பா சுப்பிரமணியம் அமராவதிபுதூரில்'காந்தி சமதர்ம பாடசாலை' என்று ஒரு பள்ளியைத் தொடங்கி நடத்தி வந்துள்ளார்.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும், நகரத்தார்கள் பாலர்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப்பள்ளிகள், கலைக் கல்லூரிகள்,

தொழில் நுட்பக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள் மருத்துவ, விவசாயக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள், தமிழிசைப் பள்ளி, தமிழிசைக் கல்லூரி பல்கலைக் கழகங்கள் என அனைத்து வகையான கல்வி நிலையங்களையும் ஏற்படுத்தினர்.

கல்விப்பணி புரிந்த நகரத்தார்களுள் அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்பர், கலைத்தந்தை கருமுத்து தியாகராாசனார் ஆகியோர் குறிப்பிடத்தக்க முன்னோடிகள் ஆவர்.

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தனிமனிதர் ஒருவரின் கொடையாலும் உருவாக்கப்பட்டது பெருமுயற்சியாலும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த அண்ணாமலை செட்டியாருக்கு அன்றைய ஆங்கில அரசாங்கம் 1929இல் செட்டி நாட்டு அரசர் என்ற பரம்பரைப் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தது.

காரைக்குடியைக் கல்விக்குடியாக மாற்றியவர் வள்ளல்அழகப்பர். மூன்று வயதுக் குழந்தையொன்று தொடக்கக்கல்வி முதல் தான் விரும்பும் மேற்படிப்பு வரை படித்து வெளிவரும் வண்ணம் அவர் உருவாக்கிய அறிவாலயங்கள் திகழ்கின்றன. மதுரையில் பல கல்வி நிலையங்களைத் தோற்றுவித்து, அங்கு ஒரு பல்கலைக்கழகம் உருவாவதற்குக் காரணமாக விளங்கியவர் கருமுத்து தியாகராசர் ஆவார்.

சுருங்கக் கூறின் இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம் நகரத்தார் சமூகம் எனலாம்.

## நகரத்தாரின் மொழிப்பணிகள்:

கல்விப் பணிக்கு அடுத்தபடியாக நகரத்தார்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு குறிப்பிடத்தக்கது. மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, இந்து மதாபிமானசங்கம், கம்பன் கழகம் போன்ற அமைப்புகள் மூலம் இலக்கியச் சொற்பொழிவுகள், நூல்கள் வெளியிடுதல் ஆகிய பணிகளைச் செய்தார்கள் கம்பன் கழகம் மேடைத் தமிழைப் பல கோணங்களில் வளர்த்தது.

தமிழ்ப் புரவலர்களாகிய நகரத்தார்கள், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாரதியார், பாரதிதாசன், கவிமணி,சுந்தானந்த பாரதியார், போன்ற பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றியும், அவர்களுக்கு உற்றுழி உதவியும், அவர்கள் படைப்புகள் வெளிவரப் பொருளுதவிகன் செய்தும் இலக்கியத் துறையை வளப்படுத்தினர். நகரத்தார்களில் புலவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், மேடைப் பேச்சாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், திறனாய்வாளர்கள் எனப் பலர் உள்ளனர். பயண இலக்கியத் துறைக்கும் குழந்தை இலக்கியத் துறைக்கும் முன்னோடியாக விளங்கியவர்கள் முறையே ஏ.கே. செட்டியார். சோமலெ போன்றோரும் அழ. வள்ளியப்பா போன்றோரும் ஆவர்.

அண்ணாமலை அரசரின் தலைமையின் கீழ்த் தமிழிசைக்கு நகரத்தார்கள் செய்த தொண்டு மகத்தானது. ஏவி.எம். மெய்யப்பச் செட்டியார, கவிஞர் கண்ணதாசன் போன்றோர் திரைப்படத்துறை மூலம் சிறந்த தமிழ்ப்பணியாற்றிச் சாதனைகள் படைத்தனர்.

நகரத்தார்களின் இதழியல் பணி சிறப்பானது; "ஊழியன்", 'குமரன்', 'தனவணிகன்' 'செட்டிநாடு" போன்ற நகரத்தார் இதழ்கள் போட்டி போட்டுக் கொண்டு தேசிய உணர்வையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் மக்களிடையே பரப்பின. இன்று தமிழ் உலகில் தலை சிறந்த எழுத்தாளர்களாகக் கருதப்படும் எழுத்தாளர்கள் பலரும்

நகரத்தார்கள் நடத்திய இதழ்களில் எழுதிப் பழகியவர்களே. நகரத்தார்கள் பதிப்பகத்துறையிலும் சிறந்து விளங்குகின்றனர். தமிழகத்திலுள்ள பதிப்பகங்களுள் பெரும்பான்மையானவை நகரத்தார் பதிப்பகங்களே.

## நகரத்தாரின் பிறதுறைப் பணிகள் :


உள்ளப் பிணி அகல சமயப்பணி மூலம் வழிகண்ட நகரத்தார்கள் உடற்பிணி அகல, பல இலவச மருத்துவ மனைகளையும் சுகாதார நிலையங்களையும் ஏற்படுத்தி வழி கண்டனர். பெண்களுக்கான மகப்பேறு மருத்துவ மனைகளையும் தாய் சேய் நல விடுதிகளையும் ஏற்படுத்தினர். அந்த வகையில் கானாடுகாத்தானில் அண்ணாமலை அரசர் 1916இல் நிறுவிய 'லேடி பெண்ட்லண்டு' மருத்துவமனைதான் பெண்களுக்கான மருத்துவ மனைகளுள் முதலாவதாகும்.

நகரத்தார் வசித்த மறவர் சீமைப் பகுதியில் வளமான ஆறுகள் இல்லை. மழையும் குறைவு. ஆகையால் முன்பு மன்னர்களும் மற்றவர்களும் செய்தததுபோல எப்போதாவது பெய்யும் மழைநீரைத் தேக்கி வைத்துக் குடிக்கவும், குளிக்கவும், உழவுத்தொழிலுக்கும், பிற தேவைகளுக்கும் பயன்படும் வண்ணம் ஊருணிகள், குளங்கள். சேங்கைகள், கண்மாய்கள் ஏற்படுத்தி மக்களுக்கு நீர் வசதி செய்து கொடுத்தனர்.

போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் நடந்து செல்வோரின் வசதிக்காக சாலைகள் அமைத்தும், தண்ணீர் பந்தல்கள்



ஏற்படுத்தியும், சுமைதாங்கிக் கற்கள் நிறுவியும் இன்னும் பாலங்கள் பூங்காக்கள், மைல்கற்கள் கைகாட்டிகள், தெருவிளக்குகள், மின்சாரச் சங்குகள், தந்திச் சாலைகள், அஞ்சல் நிலையங்கள் அமைத்தும் தங்கள் பகுதி மக்களுக்குத் தேவயான வசதிகளைச் செய்து கொடுத்தனர். கிராமப் பகுதிகளுக்கு மின்சார வசதிகள் வராத காலத்தில் நகரத்தார்கள் செட்டி நாட்டின் பல பகுதிகளில் பெரிதும் முயன்று பெரும் பொருட் செலவு செய்து அரசாங்க அனுமதியுடன் மின்சாரக் கழகங்கள் (Corporation) அமைத்துத் தங்கள் பகுதிக்கு மின்வசதி கிடைக்கச் செய்தனர்.



சிவமயம்

# ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரராள் எலக்டிரிக் பவர் கார்பொரேஷன் லிமிடெட், காரைக்குடி.

## நோட்டீஸ்.

### 1937-ம் வருஷத்திய இந்தியன் எலக்டிரிசிடி ரூல்ஸ். ரூல் நிர். 5

1937-ம் வருஷத்திய இந்தியன் எலக்டிரிசிடி ரூல்ஸ் 51-வது வகுப்
எல்லா கன்ஸ்யூமர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிற
அதன்படி, கன்ஸ்யூமர்ஸ் இடங்களில் நியூட்ரல் வயர் மூலமாக ப்யூ
ஒற்றை ஸ்விட்சோ, போட்டிருக்கக்கூடாது.

கன்ஸ்யூமர்கள், வீட்டிலுள்ள வயரிங்கை சரிபார்த்து, கீழ்க்கண்ட
திருத்தி அமைக்க வேண்டியது.

1. நியூட்ரல் வயரில் ப்யூஸ் போடப்பட்டிருந்தால், அ
எடுத்துவிட்டு ப்யூஸாகாத ஒரு லிங்க் போட வேண்டு

2. நியூட்ரல் வயரில் ஒற்றை சுவிட்ச் போடப்பட்டிருந்த
அதை எடுத்துவிட்டு வயரை நேராகக் கொண்டு போ
படவேண்டும்.

3. இரட்டை சுவிட்ச் போட்டிருந்தால் அதை அப்படியே வ
விடலாம்.

4. வயரிங்கை சரிபார்த்து நியூட்ரல் வயரில் கொண்டுவரப
டிருக்கும் ப்யூஸ், ஒற்றை சுவிட்ச் இவைகளை, கற
வயரில் மாற்றி அமைக்க வேண்டும்.

மேற்படி விஷயங்களுக்கு, மேல்கொண்டு விபரங்கள் தெரியவே
மானால், கார்பொரேஷன் என்ஜினீயரைக் கேட்டால், சொல்லுவார்.

மேற்படி ரூல் 51-வது வகுப்பை கவர்ன்மெண்டார், தற்காலிக
23-12-42 வரை அமுலுக்குக் கொண்டுவர வேண்டாமென்று ஆர்டர்
திருக்கிறார்கள். கன்ஸ்யூமர்கள் எல்லோரும் மேற்படி ரூல்ஸ்படி அவ
இடங்களில் உள்ள வயரிங்கை கூடிய சீக்கிரம் சரிபார்த்துக்கொ
வேண்டியது. இல்லாவிட்டால், கரண்டு சப்ளை செய்வதை நிறுத்துவ
காரணமாகும்.


இன்று வங்கிகள் செய்துவரும் பல பணிகளை நீண்டகாலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்துவந்த நகரத்தார்கள் வங்கித் துறையின் முன்னோடிகள் ஆவர். உண்டியல் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் இவர்களே.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நகரத்தார்களுக்கும் பர்மாவுக்கும் இடையே இருந்த தொடர்பு அடியோடு துண்டிக்கப்பட்டது. நகரத்தார்களின் பொருளாதாரமும் சிக்கலாகியது. எனினும் அந்நிலைக்கு மனம் தளராமல் உள் நாட்டிலேயே நூற்பாலை, நெசவாலை, சர்க்கரை ஆலை, காகிதச் தொழிற்சாலை, மிதி வண்டித் தொழிற் சாலை, உரத்தொழிற்சாலை, மருந்தகங்கள் ஆகியவைகளை நடத்தி வெற்றி கண்டனர். தோல் பதனிடும் தொழில் வளர்த்து உலக அளவில் தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெயரையும் புகழையும் அந்நிய நாட்டுச் செலாவணியையும் தேடி தந்தவர்கள் இவர்கள். இவ்வாறு பல தொழில் துறைகளில் ஈடுபட்டு பொருளீட்டும் நகரத்தார்கள் தனியாகவோ, அல்லது அறப்பணிக்கழகங்கள் மூலமாகவோ, சமூதாயத்திற்குத் தேவையான பணிகளைச் செய்து வருகிறார்கள்.

"தன வணிகம் குலத்தொழிலாம் தருமங்கள் குலமரபாம்" என்று டாக்டர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் கூறுவது போல நகரத்தார் குலத்திலுதித்த ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என அனைவருமே அறப்பணிகளில் ஈடுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். உலகிலேயே அறப் பணிகளுக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம் நகரத்தார் சமூகம். அறப்பணிகள் செய்ய முற்படும் போது அவர்கள் தங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டு, திட்டமிட்டு அறப்பணிகளைச் செம்மையாக செய்து முடிக்கும் இயல்புடையவர்கள்.

– தொடரும்

# மழலை மழைத்துளிகள்..!!!



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்..!!

## அழகிய எங்கள் ஊர்



ஆலும் வேலும் புல்வெளியும்
… அழகாய்ப் பனியில் குளித்திருக்கும்
காலை வேளை பூ மலரும்
… காற்றும் பூ மணம் கொண்டுவரும்
சோலை மலரில் தேனருந்திச்
… சுவைத்திட வண்டுகள் தேடிவரும்
சாலை ஓரம் காட்சியிது
… சான்றே எங்கள் ஊராகும்!

## முன்னோரை வணங்குவோம்



நதியின் ஓரம் பிறந்ததுவாம்
… நாகரீகம் நாமறிவோம்
கதைகள் சொல்லி வளர்தத்துவாம்
… கலைகள் போற்றிக் காத்திடுவோம்
மதியில் சிறந்து நாம் உயர
… மனதில் பக்தி கொண்டிடுவோம்
யாதும் முன்னோர் தந்ததுதான்
… என்றும் அவரை வணங்கிடுவோம்!

# தியாகத்தின் விலை...

உள்ளம் கொடுத்தார்;
உடலைக் கொடுத்தார்!

உயிரைக் கொடுத்தார்;
உடமையைக் கொடுத்தார்!

என்னென்ன கொடுத்தாரோ;
எல்லாமும் நாட்டுக்கே!

இன்றெங்கள் சுவாசத்தில் சுதந்திரத் தீ வளர்க்கத்தான்!

நாம் கொண்ட விடுதலையை
நமக்கான உரிமையை
கொண்டாடித் தீர்க்கிறோம் நாம்!

நாம் ஏற்ற கடமையை நமக்கான சுயநலத்தில்
ஏன் அன்று பெற்றோம்?;
எத்தனையோ இழந்தோம்;
என்றெல்லாம் மறந்தோம் நாம்!

இனியும்,

காந்தி எனும் அகிம்சைக்குக்
களங்கமாய் நமைநிறுத்த
விடுவதையா
சுதந்திர உரிமை என்போம்?



– கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

# வெற்றிப் பாதை

## அன்பான வாசகர்களுக்கு,

வாழ்க்கை என்பது புத்தகங்களில் மட்டும் கற்றுக்கொள்ளும் பாடமல்ல. நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரும், ஒவ்வொரு அனுபவமும், ஒவ்வொரு வெற்றியும், ஒவ்வொரு தோல்வியும் நமக்குப் புதிய பாடங்களை கற்றுத் தருகின்றன.

**என் வாழ்க்கைப் பயணத்தில்**, எண்ணற்ற மனிதர்களைச் சந்தித்திருக்கிறேன். பல வெற்றிகளையும், பல தோல்விகளையும், ஏற்றத் தாழ்வுகளையும், எதிர்பாராத திருப்பங்களையும் கடந்திருக்கிறேன். சில அனுபவங்கள் என்னை மகிழ்ச்சியடையச் செய்தன; சில அனுபவங்கள் என்னை சிந்திக்க வைத்தன. ஆனால் ஒவ்வொரு அனுபவமும் ஒரு புதிய வாழ்க்கைப் பாடமாகவே மாறியது.

அந்த அனுபவங்களிலிருந்து நான் கற்றுக் கொண்ட சிறிய உண்மைகள், வாழ்க்கையை நேர்மறையாக அணுக உதவிய சிந்தனைகள், மனதில் ஆழமாகப் பதிந்த பாடங்கள்– இவற்றையெல்லாம் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு சிறிய முயற்சிதான் **"வெற்றிப் பாதை."**



இந்தத் தொடரில் நான் ஆசிரியராக அல்ல, அறிவுரை கூறுபவராக அல்ல; வாழ்க்கையிடம் இன்னும் கற்றுக்கொண்டிருக்கும் ஒரு சக பயணியாக உங்களுடன் உரையாட விரும்புகிறேன்.


ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய தலைப்பு... ஒரு புதிய பார்வை... ஒரு புதிய சிந்தனை... நம் வாழ்க்கையை இன்னும் சிறப்பாக மாற்றும் ஒரு சிறிய முயற்சி...


இந்தப் பயணம் ஒரு கட்டுரையாக மட்டும் இல்லாமல், உங்களுக்கும் எனக்கும் இடையிலான ஒரு மனமார்ந்த உரையாடலாக அமையும் என்று நம்புகிறேன்.



வாருங்கள்... வெற்றிப் பாதையில் ஒன்றாகப் பயணிப்போம்!

அன்புடன்,
– சொக்கலிங்கம் இராமநாதன்



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

வெற்றிப் பாதை – 1

# தவறுகளை வாய்ப்புகளாக மாற்றும் கலை

"வாழ்க்கையில் தோல்வி என்பது முடிவல்ல;
அடுத்த வெற்றிக்கான புதிய தொடக்கம்."



ஒரு குழந்தை நடக்கக் கற்றுக்கொள்ளும்போது ஒரே முயற்சியில் நடந்து விடுவதில்லை. பல முறை கீழே விழுகிறது. மீண்டும் எழுகிறது. மீண்டும் முயற்சி செய்கிறது. இறுதியில் தன்னம்பிக்கையுடன் நடக்கத் தொடங்குகிறது.

அப்படியிருக்க, நாம் மட்டும் ஏன் வாழ்க்கையில் ஒரு தவறு நடந்தாலே மனம் உடைந்து விட வேண்டும்?

உண்மையில், தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் அந்தத் தவறிலிருந்து என்ன கற்றுக்கொள்கிறோம் என்பதுதான் நம் வாழ்க்கையை மாற்றுகிறது.

தவறு செய்தவர் தோல்வியாளர் அல்ல."நான் தவறு செய்துவிட்டேன்" என்று வருத்தப்படுபவர்கள் பலர். ஆனால் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தவறு செய்யாத மனிதன் யாரும் இல்லை.

மாணவர் தேர்வில் தவறு செய்கிறார்.
வியாபாரி முதலீட்டில் தவறு செய்கிறார்.
ஊழியர் அலுவலகத்தில் தவறு செய்கிறார்.
பெற்றோர் கூட சில நேரங்களில் குழந்தைகளை
வளர்ப்பதில் தவறு செய்கிறார்கள்.

இதில் யாரும் தோல்வியாளர்கள் அல்ல. அவர்கள் அனைவரும் கற்றுக்கொண்டவர்கள்.

ஒரே தவறை இரண்டாவது முறை செய்யாதீர்கள். ஒரு தவறு நடந்தால் அதிலிருந்து ஒரு பாடம் கிடைக்க வேண்டும். மழையில் நனைந்த ஒருவர், அடுத்த முறை குடை எடுத்துச் செல்வார்.அதேபோல், ஒரு முடிவு தவறாக இருந்தால் அடுத்த முடிவை சற்று யோசித்து எடுப்போம். இதுவே அனுபவம். வாழ்க்கையில் அனுபவம் என்பது புத்தகத்தில் படிப்பதால் மட்டும் வருவதில்லை. சில நேரங்களில் நம் தவறுகளே சிறந்த ஆசிரியர்களாக மாறுகின்றன.

ஒரு குயவர் மண்பாண்டம் செய்யும் போது, அது சரியாக வரவில்லை என்றால் உடனே தூக்கி எறிவதில்லை. அதே மண்ணை மீண்டும் பிசைந்து புதிய வடிவம் கொடுக்கிறார். அதுபோல நம் வாழ்க்கையும்.ஒரு திட்டம் தோல்வியடைந்தால் வாழ்க்கை தோல்வியடைந்துவிட்டது என்று அர்த்தமல்ல.

ஒரு வேலை கிடைக்கவில்லை என்றால் நம் திறமை குறைந்துவிட்டது என்று அர்த்தமல்ல.ஒரு முயற்சி வெற்றி பெறவில்லை என்றால் அடுத்த முயற்சியும் தோல்வியடையும் என்று யாரும் சொல்ல முடியாது.



ஒவ்வொரு தவறும் நமக்குள் மறைந்திருக்கும் ஒரு புதிய திறமையை வெளிக்கொண்டு வரக்கூடிய வாய்ப்பாக இருக்கலாம்.

சிலர் எப்போதும் சூழ்நிலையைக் குறை கூறுவார்கள்.
"அந்த நேரம் சரியாக இல்லை."
"எனக்கு உதவி கிடைக்கவில்லை."
"என் அதிர்ஷ்டம் மோசம்."
இப்படிப் பேசிக் கொண்டே இருந்தால் மாற்றம் வராது. அதற்கு பதிலாக, "இதிலிருந்து நான் என்ன கற்றுக்கொள்ளலாம்?" என்று கேட்டுக் கொண்டால் வாழ்க்கை மாறத் தொடங்கும்.

தன்னம்பிக்கையே மிகப்பெரிய பலம் தவறு செய்த பிறகு நம்மை நாமே குறை கூறுவது மிகவும் எளிது. ஆனால், "இந்த முறை தவறிவிட்டேன்... அடுத்த முறை நிச்சயம் சிறப்பாக செய்வேன்." என்று நினைப்பவர்கள் தான் வெற்றி பெறுகிறார்கள்.

தன்னம்பிக்கை என்பது ஒருபோதும் தோற்காதவர்களுக்கு கிடைப்பதல்ல. பலமுறை தோற்றும் போதும் மீண்டும் எழுபவர்களுக்குக் கிடைக்கும் பரிசு.

சிறு மாற்றங்கள் பெரிய வெற்றியை உருவாக்கும். ஒரே நாளில் வாழ்க்கையை மாற்ற வேண்டிய அவசியமில்லை. இன்று ஒரு நல்ல பழக்கத்தைத் தொடங்குங்கள். நாளை இன்னொரு நல்ல மாற்றத்தைச் செய்யுங்கள்.சிறு சிறு முன்னேற்றங்கள் சேர்ந்து பெரிய வெற்றியை உருவாக்கும்.

ஒரு செங்கல்லால் வீடு கட்ட முடியாது. ஆனால் ஒவ்வொரு செங்கல்லும் சேர்ந்து அழகான வீட்டை உருவாக்குகிறது.அதேபோல, ஒவ்வொரு நல்ல முயற்சியும் நம் எதிர்காலத்தை உருவாக்குகிறது.



வெற்றி பெற்றவர்களுக்கும் தவறுகள் நடந்துள்ளன. அவர்களுக்கும் தோல்விகள் வந்துள்ளன. ஆனால் அவர்கள் ஒரு விஷயத்தை மட்டும் செய்யவில்லை. அவர்கள் முயற்சியை நிறுத்தவில்லை. அதனால் தான் அவர்கள் இன்று மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார்கள்.

நாம் என்ன செய்ய வேண்டும்?

தவறு நடந்தால் பதற்றப்பட வேண்டாம்.
காரணத்தை அமைதியாக ஆராயுங்கள்.
அதிலிருந்து ஒரு பாடம் கற்றுக்கொள்ளுங்கள்.
மீண்டும் முயற்சி செய்யத் தயங்காதீர்கள்.
உங்களை நீங்களே நம்புங்கள்.

இந்த ஐந்து பழக்கங்கள் வாழ்க்கையை மெதுவாக நல்ல பாதைக்கு அழைத்துச் செல்லும்.

வாழ்க்கை என்பது தவறுகள் இல்லாத பயணம் அல்ல. தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேறும் பயணம்தான் வாழ்க்கை. நாம் சந்திக்கும் ஒவ்வொரு தடையும், ஒவ்வொரு தவறும், ஒவ்வொரு தோல்வியும் நம்மை வலிமையான மனிதர்களாக மாற்றும் வாய்ப்புகளே. தவறை நினைத்து வருந்தாதீர்கள்... அதிலிருந்து கற்றுக்கொண்டு முன்னேறுங்கள்.

இன்று செய்த தவறே, நாளைய வெற்றியின் அடித்தளமாக மாறலாம். ஒவ்வொரு நாளும் ஒரு புதிய வாய்ப்பு. அதை நம்பிக்கையுடன் வரவேற்போம்!

"தவறு செய்வது மனித இயல்பு;
தவறிலிருந்து கற்றுக்கொள்வதே
வெற்றியின் முதல் படி."

– தொடர்ந்து பயணிப்போம்



பெண் கதவு... ஆண் பூட்டு..! – 23

# பெண்ணுக்கு பெண்ணே... துணையா? எதிரியா?



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

"ஒரு ஆணை ஏறத்தாழ இருபது ஆண்டுகள் சிரமப்பட்டு ஒரு பெண் உருவாக்குகிறாள்; ஆனால் அவனை சில நொடிகளில் இன்னொரு பெண் மாற்றிவிடுகிறாள்" என்ற ஒரு பழமொழி போன்ற கூற்று பல இடங்களில் சொல்லப்படுகிறது. இந்தக் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்வதைவிட, அதன் பின்னால் இருக்கும் குடும்ப உளவியலைப் புரிந்துகொள்வதே முக்கியம்".



ஒரு தாய், தனது மகனைப் பிறந்த நாளிலிருந்து அன்போடு வளர்க்கிறாள். அவனது சிரிப்பிலும், அழுகையிலும், வெற்றியிலும், தோல்வியிலும் அவளது வாழ்க்கை பின்னிப் பிணைந்திருக்கும். அந்த மகன் திருமணமான பிறகு, தனது மனைவியுடன் அதிக நேரம் செலவிடுவது இயல்பான வாழ்க்கை மாற்றம். ஆனால் அந்த மாற்றத்தை சில தாய்மார்கள் மனதளவில் ஏற்றுக்கொள்ள சிரமப்படுகிறார்கள். இதனால் சிறிய மனக்கசப்புகள் கூட பெரிய குடும்பப் பிரச்சினைகளாக மாறிவிடுகின்றன.

அதே நேரத்தில், ஒரு பெண் தனது பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர்கள் என பல ஆண்டுகளாக வாழ்ந்த வீட்டை விட்டு, புதிய குடும்பத்தில் வாழ வருகிறாள். புதிய மனிதர்கள், புதிய பழக்க வழக்கங்கள், புதிய சூழல் என்று அனைத்தையும் ஏற்றுக்கொண்டு வாழ்வது எளிதான விஷயம் அல்ல. அதனால் மருமகளின் மன நிலையையும் புரிந்துகொள்ள வேண்டும்.



மாமியார், மருமகளை தனது மகளாக எண்ணினாலும், மருமகள் மாமியாரை தனது தாயைப் போல மதித்தாலும், குடும்பத்தில் பல பிரச்சினைகள் இயல்பாகவே குறைந்துவிடும். உறவுகளை வெல்லும் சக்தி அன்புக்கும் புரிதலுக்குமே உண்டு; அதிகாரத்திற்கோ பிடிவாதத்திற்கோ அல்ல.

இதுபோன்ற மனநிலையை நாம் அன்றாட வாழ்க்கையிலும் பார்க்கிறோம். பேருந்துகளில் வயதான பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் அல்லது குழந்தையைத் தூக்கிக்கொண்டு நிற்கும் தாய்மார்களுக்கு இடம் கொடுப்பதில் பெண்களே சில நேரங்களில் தயக்கம் காட்டுவதை காண முடிகிறது. அதேபோல், அலுவலகம், பள்ளி, கல்லூரி, சமூக நிகழ்ச்சிகள் என பல இடங்களில் மற்ற பெண்களைப் போட்டியாகப் பார்க்கும் மனப்பான்மையும் சிலரிடம் காணப்படுகிறது. மற்றவர்களின் உடை, நகை, வசதி, வாழ்க்கை ஆகியவற்றை ஒப்பிட்டு தேவையற்ற பொறாமையை வளர்த்துக் கொள்வதும் மன அமைதியை குலைக்கிறது.

ஒரு பெண்ணின் வெற்றியை மற்றொரு பெண் பாராட்டும் மனப்பான்மை அதிகரிக்க வேண்டும். மற்றவரின் முன்னேற்றத்தைப் பார்த்து மகிழ்வதும், தேவைப்படும் நேரத்தில் உதவிக்கரம் நீட்டுவதும் சமூகத்தை ஆரோக்கியமாக மாற்றும்.

இன்னொரு சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், திருமணத்திற்குப் பிறகு மகள் தனிக்குடித்தனம் சென்றால் அது அவளது வாழ்க்கை என்று ஏற்றுக்கொள்ளும் பலர், மகன் தனியாக வாழ முடிவு செய்தால் அதை ஏற்கத் தயங்குகிறார்கள். இந்த இரட்டை மனப்பான்மை மாற வேண்டும். மகனுக்கும் மகளுக்கும் ஒரே அளவுகோல் இருக்கும்போதுதான் குடும்பத்தில் சமநிலை உருவாகும்.

இன்று பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சமூகப் பங்கு ஆகியவை தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. அதே அளவில் பெண்களுக்குள் ஒற்றுமையும், புரிதலும், பரஸ்பர மரியாதையும் வளர வேண்டும். ஒரு பெண்ணின் உயர்வு மற்றொரு பெண்ணின் தோல்வி அல்ல; அது சமூகத்தின் முன்னேற்றம் என்பதை உணர வேண்டும்.



பெண் விடுதலை என்பது சட்டங்களால் மட்டுமல்ல, மனப் பான்மையாலும் உருவாகிறது. பெண்கள் ஒருவரை ஒருவர் மதித்து, ஊக்குவித்து, ஆதரித்து வாழும்போது குடும்பமும் மகிழ்ச்சியாக இருக்கும்; சமூகமும் வளமாகும்.

பெண்களுக்கு பெண்ணே எதிரி என்ற எண்ணம் மாறி,


"பெண்ணுக்கு பெண்ணே துணை"

என்ற எண்ணம் வளர்ந்தால், இல்லறமும் மலரும், சமூகமும் மலரும்.

ஒரு குடும்பத்தில் பெண்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, மதித்து, ஊக்குவித்தால் அந்த வீடு அமைதியின் இல்லமாக மாறும். அந்த மாற்றம் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் தொடங்கட்டும்.

"பெண்ணின் உண்மையான அழகு அவள் அணியும் ஆபரணத்தில் இல்லை; மற்றொரு பெண்ணின் வெற்றியை மனமாரப் பாராட்டும் அவளது உள்ளத்தில்தான் இருக்கிறது."

– தொடரும்



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON
Google Play








# வீட்டிலேயே ஹோட்டல் சுவை பிரியாணி

தினமும் ஒரே மாதிரியான சாப்பாடு செய்து அலுத்துவிட்டதா? வீட்டில் உள்ளவர்களுக்கு சற்று வித்தியாசமாகவும், அதே நேரத்தில் சுவையாகவும் ஏதாவது செய்து கொடுக்க நினைக்கிறீர்களா?

அப்படியானால், இந்த **பன்னீர் பிரியாணி** உங்களுக்கான சிறந்த தேர்வு. வீட்டில் இருக்கும் பன்னீர் மற்றும் சில காய்கறிகளை வைத்தே எளிதாகச் செய்யலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடக்கூடிய இந்த பிரியாணி, மதிய உணவிற்கும், லன்ச் பாக்ஸிற்கும், விடுமுறை நாட்களுக்கும் மிகவும் ஏற்றது.

இதோ... சுவையான பன்னீர் பிரியாணியின் எளிய செய்முறை!

## தேவையான பொருட்கள்

### ஊற வைப்பதற்கு...

- பன்னீர் – 400 கிராம்
- மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்
- காஷ்மீரி மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்
- உப்பு – 1 டீஸ்பூன்
- சாட் மசாலா – 1 டீஸ்பூன்

### பிரியாணி தாளிப்பதற்கு...

- எண்ணெய் – 1 1/2 டேபிள் ஸ்பூன்
- நெய் – 2 டேபிள் ஸ்பூன்
- பட்டை – 2 துண்டு
- கிராம்பு – 5
- ஏலக்காய் – 3
- பிரியாணி இலை – 2
- பெரிய வெங்காயம் – 3 (நீளவாக்கில் மெல்லியதாக நறுக்கியது)
- இஞ்சி பூண்டு பேஸ்ட் – 1 டீஸ்பூன்
- பச்சை மிளகாய் – 3
- பெரிய தக்காளி – 1 (பொடியாக நறுக்கியது)
- பீன்ஸ் – 1 கப் (பொடியாக நறுக்கியது)
- கேரட் – 1 கப் (பொடியாக நறுக்கியது)
- பச்சை பட்டாணி – 1 கப்
- குடைமிளகாய் – 1 (பொடியாக நறுக்கியது)
- உப்பு – சுவைக்கேற்ப
- மஞ்சள் தூள் – 1/2 டீஸ்பூன்
- காஷ்மீரி மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்
- மிளகுத் தூள் – 1 டீஸ்பூன்
- மல்லித் தூள் – 1 1/2 டீஸ்பூன்
- சீரகத் தூள் – 1 டீஸ்பூன்

- கரம் மசாலா – 1 டீஸ்பூன்
- ஊற வைத்த பன்னீர்
- புதினா – 1 கையளவு
- கொத்தமல்லி – 1 கையளவு
- தண்ணீர் – 2 கப்
- பாசுமதி அரிசி – 1 கப் (1/2 மணிநேரம் ஊற வைத்தது)

**செய்முறை:**

- முதலில் ஒரு பாத்திரத்தில் பன்னீரை சற்று பெரிய துண்டுகளாக்கி எடுத்து, அத்துடன் மஞ்சள் தூள், காஷ்மீரி மிளகாய் தூள், சுவைக்கேற்ப உப்பு மற்றும் சாட் மசாலாவை சேர்த்து பிரட்டி, சிறிது நேரம் ஊற வைக்க வேண்டும்.

- பின்னர் பிரியாணி செய்ய ஒரு அகலமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் மற்றும் நெய் சேர்த்து சூடானதும், பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை சேர்த்து தாளிக்க வேண்டும்.

- அதன் பின் அதில் நீளவாக்கில் மெல்லியதாக நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்க வேண்டும்.

- பின்பு அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட், பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

- பிறகு அதில் பொடியாக நறுக்கிய தக்காளியை சேர்த்து 1 நிமிடம் வதக்க வேண்டும்.

- அடுத்து அதில் நறுக்கிய பீன்ஸ், கேரட், பச்சை பட்டாணி, குடைமிளகாய் ஆகியவற்றை சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கிளறி, மூடி வைத்து 3 நிமிடம் காய்கறிகளை வேக வைக்க வேண்டும்.

- பின்னர் அதில் மஞ்சள் தூள், காஷ்மீரி மிளகாய் தூள், மிளகுத் தூள், மல்லித் தூள், சீரகத் தூள், கரம் மசாலா ஆகியவற்றை சேர்த்து நன்கு கிளறி, மூடி வைத்து 2 நிமிடம் வேக வைக்க வேண்டும்.
- அதன் பின் மூடியைத் திறந்து அதில் பன்னீரை சேர்த்து கிளறி, புதினா மற்றும் கொத்தமல்லியை சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.
- அடுத்து அதில் 2 கப் நீரை ஊற்றி, நீர் கொதிக்க ஆரம்பித்ததும், 1/2 மணிநேரம் ஊற வைத்த பாசுமதி அரிசியை நீரில் கழுவிவிட்டு சேர்த்து கிளறி, மூடி வைத்து மிதமான தீயில் 20 நிமிடம் வேக வைக்க வேண்டும்.
- அதன் பின் அடுப்பை அணைத்துவிட்டு 15 நிமிடம் அப்படியே தம் போட வேண்டும்.
- 15 நிமிடம் கழித்து மூடியைத் திறந்து கிளறினால், சுவையான பன்னீர் பிரியாணி தயார்.

## நிறைவாக...

குறைந்த நேரத்தில், ஒரே ஒரு பாத்திரத்தில் சுலபமாகச் செய்யக்கூடிய இந்த பன்னீர் பிரியாணி, வீட்டில் உள்ள அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தும் சுவையான உணவாக இருக்கும். விடுமுறை நாட்கள், குடும்ப ஒன்று கூடல்கள் அல்லது சிறிய கொண்டாட்டங்கள் என எந்த நேரத்திலும் செய்து பரிமாறலாம்.

கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# பாசம் தாங்கும் குடும்பம்...

வறுமைப் பிடியில்  வாடும் உள்ளம்
உழைத்துக் களைத்து  சோர்வும் சேரும்
வியர்வைத் துளிகள் வேதனை சொல்லும்

பாசப் பிடியில்இயங்கும் குடும்பம்
தாய்தகப்பன் வழியே  பிள்ளைகள் செல்லும்
ஈன்றவள் வதனம் நெஞ்சுரம் நல்கும்

ஒருவர் பாரம் ஏனையோர் சுமப்பர்
தட்டிக் கொடுத்து தோள் கொடுப்பர்
விட்டுக் கொடுத்து  வாழப் பழகுவர்

சுமைகள் ஆங்கே சுகமாய்த் தெரியும்
வாழ்வியல் அர்த்தம் விளக்கும் புத்தகம்
உண்மை நம்பிக்கையால் அறியும் வித்தகம்

நேச வலையை நெய்து  பிணைக்கும்
விலையில்லாப் பாசம் வெகுமதியாய் விளங்கும்
தலைமுறை தாண்டி திறம்பட வெல்லும்

குடும்பம் என்றதோர் அழகிய கோயில்
சீர்பட வாழ்வது
இன்றைய இளைஞோர் கையில்!



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# பங்கு சந்தை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) மற்றும் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பற்றிய விரிவான பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் அறியலாம்.

## இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

OnEMI Technology Solutions Limited

**OnEMI TECHNOLOGY SOLUTIONS LIMITED (544754/KISSHT)**

**இந்நிறுவனத்தைப் பற்றி:**

இந்தியாவில் கடன் பெறுவதற்கான வாய்ப்புகளைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கும் ஒரு முன்னணி டிஜிட்டல் கடன் வழங்கும் தளமாக OnEMI திகழ்கிறது. முறையான கடன் வசதிகள் குறைவாக உள்ளவர்கள் மற்றும் புதிதாகக் கடன் பெறுபவர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன், பல்வேறு நுகர்வோர் தேவைகளுக்கு ஏற்ப விரைவான, பாதுகாப்பான மற்றும் தடையற்ற நிதித் தீர்வுகளை OnEMI வழங்குகிறது. மேம்பட்ட தரவுப் பகுப்பாய்வு, மாற்று கடன் மதிப்பீட்டு முறைகள் மற்றும் வலுவான தொழில்நுட்பக் கட்டமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி, சிறிய அளவிலான தனிநபர் கடன்கள் முதல் சொத்து மீதான கடன் (LAP) போன்ற பிணையம் சார்ந்த கடன்கள் வரை பல்வேறு வகையான கடன் தயாரிப்புகளை இந்நிறுவனம் வழங்குகிறது. வலுவான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதோடு, தனது NBFC துணை நிறுவனமான 'Si Creva Capital Services' மூலம் செயல்படும் OnEMI, பொறுப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கடன் சேவைகளை வழங்க, ஒழுங்குமுறை விதிமுறைகளின் கண்டிப்புடன் நவீன தொழில்நுட்பப் புதுமைகளையும் ஒருங்கிணைக்கிறது. லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்குரிய கூட்டாளியாகத் திகழும் OnEMI, நிதிச் சேர்க்கை என்பது வெறும் இலக்காக மட்டுமல்லாமல், ஒவ்வொரு இந்தியக் குடும்பத்திற்கும் ஒரு யதார்த்தமாக அமையும் எதிர்காலத்தை உருவாக்கி வருகிறது.

OnEMI Technology Solutions Ltd என்பது இந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் கடன் வழங்கும் (fintech) நிறுவனங்களில் ஒன்றாகும். இது முக்கியமாகத் தனது முதன்மைத் தளமான 'Kissht' மூலம் செயல்படுகிறது; பாரம்பரிய வங்கிகளிடமிருந்து போதுமான சேவைகளைப் பெறாத தனிநபர்களுக்கு உடனடி டிஜிட்டல் கடன்கள்,

E M I வசதிகள் மற்றும் கடன் தீர்வுகளை இது வழங்குகிறது. இந்நிறுவனம் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த கடன் தகுதி மதிப்பீடு, மாற்று கடன் மதிப்பீட்டு முறைகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை முன்னிலைப்படுத்தும் வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது. மேலும், இது 'Si Creva Capital Services' என்ற துணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது; ரிசர்வ் வங்கியின் (RBI) கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட இந்த N B F C ( வங்கி அல்லாத நிதி நிறுவனம்) மூலமாகவே இந்நிறுவனம் கடன்களை வழங்குகிறது.

இந்நிறுவனம் ரன்வீர் சிங் மற்றும் கிருஷ்ணன் விஸ்வநாதன் ஆகியோரால் நிறுவப்பட்டது, அவர்களே அதன் நிறுவனர்களாகவும் தொடர்கின்றனர். பொதுப் பங்கு வெளியீட்டிற்குப் பிறகு, இது நிறுவனங்களின் ஆதரவைப் பெற்று, தனது நிர்வாகத்தையும் வலுப்படுத்தியுள்ளது.

Kissht என்பது தனது புதுமையான சேவைகள் மூலம் கடன் பெறுவதை எளிதாக்கும் ஒரு நம்பகமான நிதிச் சேவைத் தளமாகும். எளிதாகப் பெறக்கூடிய தனிநபர் மற்றும் வணிகக் கடன்களை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்ற K i s s h t , குறைந்தபட்ச ஆவணங்கள் மற்றும் விரைவான ஒப்புதல் நடைமுறைகள் மூலம் தடையற்ற சேவையை உறுதி செய்கிறது. வாடிக்கையாளர்களின் வசதிக்கு முக்கியத்துவம் அளிக்கும் Kissht, அணுகக்கூடிய மற்றும் நம்பகமான நிதித் தீர்வுகள் மூலம் இந்தியா முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் நிதி இலக்குகளை அடையவும், கனவுகளை நனவாக்கவும் உதவுகிறது.

நிறுவனங்கள் கடன் தொடர்பான முடிவுகளை எடுப்பது முதல் நிலுவைத் தொகையை வசூலிப்பது வரையிலான தங்கள் செயல்பாடுகளில், மேம்பட்ட தரவுப் பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் சார்ந்த புள்ளிவிவர மாதிரிகளைப் பயன்படுத்துகின்றன.

அதன் நிறுவனர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களான ரன்வீர் சிங் மற்றும் கிருஷ்ணன் விஸ்வநாதன் ஆகிய இருவருக்கும், நிதிச் சேவைகளில், குறிப்பாக தரவுப் பகுப்பாய்வு மற்றும் வசூல் சார்ந்த இடர் மேலாண்மையில், முறையே 18 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது. வெர்டெக்ஸ் குரோத் ஃபண்ட் மற்றும் பிற முன்னணி துணிகர மூலதன நிறுவனங்கள் போன்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் Kissht நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளனர்.

RING என்பது சில நிமிடங்களிலேயே உடனடி கடன்களை வழங்க வடிவமைக்கப்பட்ட ஒரு நவீன டிஜிட்டல் செயலியாகும். ஆவணங்கள் ஏதுமின்றி, எளிமையான டிஜிட்டல் KYC மற்றும் நேரடி வங்கிப் பரிமாற்ற வசதிகளுடன், மிக விரைவாகக் கடன் வழங்கும் தளங்களில் ஒன்றாக R I N G திகழ்கிறது. இந்தியாவின் இளைஞர்களுக்குக் கடன் வசதியை எளிதாகக் கிடைக்கச் செய்து, அவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கவும் புதிய வாய்ப்புகளைப் பெறவும் வலுவூட்டுவதே எங்கள் நோக்கமாகும்.

PaywithRing (RING) என்பது OnEMI Technology Solutions Ltd–இன் முதன்மையான டிஜிட்டல் கடன் மற்றும் கட்டணச் (payments) தளமாகும். Kissht நிறுவனம் முக்கியமாக நேரடி டிஜிட்டல் கடன் சேவைகளில் கவனம் செலுத்தும் அதே வேளையில், தனிநபர் கடன்கள், UPI கட்டணங்கள், பில் செலுத்துதல்,

வணிகர்களுக்கான கடன் வசதி மற்றும் ஒருங்கிணைந்த நிதிச் சேவைகள் (embedded finance) ஆகியவற்றை ஒரே செயலிக்குள் கொண்டு வருவதன் மூலம், ஒரு முழுமையான நுகர்வோர் நிதிச் சூழல் அமைப்பாக (ecosystem) செயல்படும் வகையில் RING வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்சேவையை OnEMI நிர்வகித்து வருகிறது; அதே சமயம், அதன் முழு உரிமையிலான NBFC துணை நிறுவனமான Si Creva Capital Services உட்பட, RBI–இன் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கடன் வழங்கும் கூட்டாளர் நிறுவனங்களே கடன் வழங்கும் பணிகளை மேற்கொள்கின்றன.

PaywithRing என்பது வெறும் கடன் வழங்கும் செயலி மட்டுமல்ல; இது பரந்த OnEMIசூழலமைப்பிற்கான (ecosystem) வாடிக்கையாளர்களை ஈர்த்தல் மற்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணுதல் ஆகியவற்றுக்கான ஒரு முக்கிய உத்திசார் தளமாகும். இதில் உள்ள கட்டணச் சேவைகள், கடன் வசதி, வணிகர்களுக்கான நிதி மற்றும் ஒருங்கிணைந்த கடன் சேவைகள் (embedded credit) ஆகியவை வருவாய் ஈட்டுவதற்கான பல்வேறு வாய்ப்புகளை வழங்குகின்றன. விரைவான வளர்ச்சியையும், அதே வேளையில் கட்டுப்பாடான கடன் மதிப்பீடு மற்றும் கடன் தரத்தையும் சமநிலையில் பராமரிப்பதே இதில் உள்ள முக்கிய சவாலாகும். அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்படும் பட்சத்தில், RING நிறுவனமானது OnEMI Technology Solutions–க்கு முக்கிய மதிப்பு சேர்ப்பதுடன், நிறுவனத்தின் வருவாய் தொடர்ந்து வளர்வதற்கும் உறுதுணையாக அமையும்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

## வணிக மாதிரி:

இந்நிறுவனம் முக்கியமாக பின்வரும் வழிகளில் வருவாய் ஈட்டுகிறது:

1) கடன்கள் மீதான வட்டி வருமானம்.
2) செயலாக்கக் கட்டணங்கள்.
3) வணிகர் நிதி கூட்டாண்மைகள
4) நிதித் தயாரிப்புகளைக் குறுக்கு விற்பனை செய்தல்.
5) கடன் சேவை மற்றும் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் கடன் தீர்வுகள்.

வங்கிகளைப் போலல்லாமல், OnEMI, கடன் மதிப்பீட்டிற்காகத் தனக்கே உரிய தொழில்நுட்பம் மற்றும் மாற்றுத் தரவுகளைப் பயன்படுத்தி, குறைந்த அல்லது பாரம்பரிய கடன் வரலாறு இல்லாத வாடிக்கையாளர்கள் மீது அதிக கவனம் செலுத்துகிறது.

## தயாரிப்புத் தொகுப்பு:

அதன் கடன் வழங்கும் சூழலமைப்பில் பின்வருவன அடங்கும்:

1) தனிநபர் கடன்கள்
2) நுகர்வோர் நீடித்தப் பொருட்களுக்கான நிதியுதவி
3) கைபேசி நிதியுதவி
4) வணிகக் கடன்கள்
5) சொத்து மீதான கடன் (LAP)
6) வணிகர் நிதியுதவி
7) கடன் வரித் தயாரிப்புகள்

கடன் வழங்கும் செயல்முறை ஏறக்குறைய முழுவதுமாக டிஜிட்டல் மயமாக உள்ளது, இது விரைவான ஒப்புதல்களையும் கடன் வழங்கல்களையும் சாத்தியமாக்குகிறது.

**தொழில்நுட்பச் சாதகம்:**

OnEMI–யின் போட்டித்திறன் பின்வருவனவற்றில் அடங்கியுள்ளது:

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கடன் மதிப்பீடு

இயந்திர கற்றல் இடர் மாதிரிகள்

மாற்று கடன் மதிப்பெண் முறை

டிஜிட்டல் முறையில் உங்கள் வாடிக்கையாளரை அறிதல் (KYC)

தானியங்கி வசூல்

நிகழ்நேர மோசடி கண்டறிதல்

இந்தத் திறன்கள், வழக்கமான வங்கி மாதிரிகளின் கீழ் தகுதி பெறாத வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்ய உதவுகின்றன.

**சந்தை வாய்ப்பு:**

இந்தியாவின் டிஜிட்டல் கடன் சந்தையானது பின்வருவனவற்றால் தொடர்ந்து பயனடைந்து வருகிறது:

ஸ்மார்ட்போன் பயன்பாட்டின் அதிகரிப்பு

UPI–இன் பயன்பாடு

விரிவடைந்து வரும் நடுத்தர வர்க்கம்

மின்னணு வர்த்தகத்தின் (e–commerce) வளர்ச்சி

முதல் முறையாகக் கடன் பெறுவோரின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் இருத்தல்

இது OnEMI போன்ற டிஜிட்டல் கடன் நிறுவனங்களுக்கு ஒரு பெரிய சந்தை வாய்ப்பை உருவாக்குகிறது.

**வளர்ச்சிக்கான உந்துசக்திகள்:**

சாதகமான காரணிகள் பின்வருமாறு:

நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்களில் (AUM) விரைவான வளர்ச்சி

அதிகரித்து வரும் வாடிக்கையாளர் தளம்

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கும் துறையில் விரிவாக்கம்

வலுவான தரவு பகுப்பாய்வுத் திறன்கள்

குறுக்கு விற்பனை வாய்ப்புகள்

அதிக செயல்பாட்டு நெம்புகோல்

நிறுவனம் சமீபத்தில் தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் (AUM) சுமார் ₹8000 கோடியாக உள்ளதாக அறிவித்தது, இது ஆண்டுக்கு ஆண்டு சுமார் 61% அதிகமாகும், மேலும் இது வலுவான கடன் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

**அடிப்படைப் பார்வை:**

இம்மூல நிறுவனம் 18.3 க என்ற ஒருங்கிணைந்த ஒரு பங்குக்கான வருவாயையும் (EPS – கடந்த 12 மாதங்களுக்கு), 17.36 என்ற ஒருங்கிணைந்த PE விகிதத்தையும் கொண்டுள்ளது (இதனைத் துறையின் 24.08 என்ற PE விகிதத்துடன் ஒப்பிடலாம்).

இந்நிறுவனம் கடந்த 5 ஆண்டுகளில் 46.8% என்ற கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதத்தில் (CAGR) நல்ல லாப வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கடனாளிகளிடமிருந்து பணம் வசூலிக்க ஆகும் நாட்கள் (Debtor days) 23.8–லிருந்து 17.5 நாட்களாகக் குறைந்து முன்னேற்றம் கண்டுள்ளது.

# நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>17.36 | EPS - TTM (₹)<br>18.31 |
| MCap (₹ Cr.)<br>5,354.39 | Sectoral MCap Rank<br>50 |
| PB Ratio (x)<br>3.98 | Dividend Yield (%)<br>0.00 |
| Face Value (₹)<br>1.00 | Beta<br>- |
| VWAP (₹)<br>322.37 | 52W H/L (₹)<br>351.50 / 190.00 |

**OnEMI Technology Share Price Insights** VIEW ALL

- Board Meeting on Jul 29, 2026
- Zero Debt Burden
- Beating 3 Yr Revenue CAGR
- OnEMI Technology Share Price Update

**OnEMI Technology Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↑ 0.08% |
| 1 Week | ↓ -6.57% |
| 1 Month | ↑ 13.7% |
| 3 Months | N.A. |
| 1 Year | N.A. |
| 3 Years | N.A. |
| 5 Years | N.A. |

**INSIGHTS OnEMI Technology**

| | |
|---|---|
| Board Meeting on Jul 29, 2026 | Meeting Agenda: Quarterly Results. Please add to watchlist to track closely. |
| Zero Debt Burden | Company has no debt since last 5 years. (Source: Standalone Financials) |
| Beating 3 Yr Revenue CAGR | Company's annual revenue growth of 63.31% outperformed its 3 year CAGR of 29.83%. (Source: Consolidated Financials) |
| Employee & Interest Expense | Company has spent 12.95% of its operating revenues towards interest expenses and 11.58% towards employee cost in the year ending Mar 31, 2026. (Source: Consolidated Financials) |
| OnEMI Technology Share Price Update | OnEMI Technology Solutions Ltd. share price moved up by 0.08% from its previous close of Rs 317.55. OnEMI Technology Solutions Ltd. stock last traded price is 317.80 |

## நிதிச் செயல்பாடு:

சமீபத்திய சிறப்பம்சங்கள்:

ஆரோக்கியமான வருவாய் வளர்ச்சி

மேம்படும் இலாபத்தன்மை

கடந்த பல ஆண்டுகளாக வலுவான இலாப கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (CAGR)

20%-க்கும் அதிகமான பங்கு மூலதன மீதான வருமானம்

பட்டியலிடப்பட்ட பிறகு, பட்டியலிடப்பட்ட பல ஃபின்டெக் நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது நியாயமான மதிப்பீடு.

# நிறுவனத்தின் நிதி நிலை:

| QUARTERLY \| ANNUAL | MAR 2026 | DEC 2025 |
|---|---|---|
| Total Income | 625.20 | 600.75 |
| Total Income Growth (%) | ↑ 4.07 | ↑ 60.95 |
| Total Expenses | 438.45 | 422.04 |
| Total Expenses Growth (%) | ↑ 3.89 | ↑ 68.25 |
| EBIT | 186.75 | 178.71 |
| EBIT Growth (%) | ↑ 4.50 | ↑ 46.00 |
| Profit after Tax (PAT) | 82.18 | 77.09 |
| PAT Growth (%) | ↑ 6.61 | ↑ 42.32 |
| EBIT Margin (%) | 29.87 | 29.75 |
| Net Profit Margin (%) | 13.15 | 12.83 |
| Basic EPS (₹) | 10.37 | 14.25 |

| QUARTERLY \| ANNUAL | FY 2026 | FY 2025 | FY 2024 |
|---|---|---|---|
| Total Revenue | 2,209.13 | 1,352.69 | 1,700.30 |
| Total Revenue Growth (%) | ↑ 63.31 | ↓ -20.44 | ↑ 69.77 |
| Total Expenses | 1,832.45 | 1,136.42 | 1,432.86 |
| Total Expenses Growth (%) | ↑ 61.25 | ↓ -20.69 | ↑ 46.58 |
| Profit after Tax (PAT) | 281.45 | 160.62 | 197.29 |
| PAT Growth (%) | ↑ 75.23 | ↓ -18.59 | ↑ 613.09 |
| Operating Profit Margin (%) | 30.23 | 28.46 | 20.07 |
| Net Profit Margin (%) | 12.91 | 12.00 | 11.78 |
| Basic EPS (₹) | 46.80 | 33.09 | 41.27 |

# மேம்பட்ட விளக்கப்படம்:

## Technicals



## சகநிறுவன ஒப்பீடு:

### Peer Comparison





JSG Leasing Stock Performance | Ratio Performance | See All Parameters

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| JSG Leasing | 620.82 | 98.25 | 15.82 | 10.63 | 369.82 | 4.06 |
| Authum Investment | 21.78 | 3.09 | 13.11 | 10.05 | 68.91 | 88.78 |
| Paisalo Digital | 27.28 | 3.61 | 13.22 | 3.76 | 25.58 | 73.49 |
| Ashika Credit | 162.55 | 3.15 | 5.15 | 3.23 | 173.46 | 51.93 |
| OnEMI Technology Solutions Ltd | 17.30 | 3.97 | 20.96 | 7.05 | 29.83 | 30.23 |

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

### Shareholding Pattern


QOQ Change | Total Shareholdings




*Showing JSG Leasing Shareholding as on Jun 2026*

| CATEGORY | JUN 2026 | MAR 2026 | DEC 2025 | SEP 2025 |
|---|---|---|---|---|
| Promoters | 33.88 | 33.88 | 33.88 | 33.88 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 0.13 | 0.13 | 0.13 | 0.00 |
| DII | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Others | 65.99 | 65.99 | 65.99 | 66.12 |

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on Jun 2026*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 6,91,08,400 | 33.88 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 2,70,248 | 0.13 % | 0.00 |
| DII | 0 | 0.00 % | 0.00 |
| MF | 0 | 0.00 % | 0.00 |
| Others | 13,46,21,352 | 65.99 % | 0.00 |

## பரஸ்பர நிதியத்தின் உரிமை:

### MF Ownership

**HDFC Banking & Financial Services Direct-G**
Equity: Sectoral-Banking & Financial Services
3 ★

| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |
|---|---|---|
| 53.11 | 1.16% | ↓ 18.42 |

**Tata Banking and Financial Services Direct-G**
Equity: Sectoral-Banking & Financial Services
3 ★

| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |
|---|---|---|
| 46.96 | 1.48% | 0.00 |

**Quant BFSI Direct-G**
Equity: Sectoral-Banking & Financial Services
5 ★

| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |
|---|---|---|
| 42.68 | 5.09293619% | 0.00 |

*MF Ownership as on 30 June 2026*

View all Mutual Fund Schemes »

## எமது ஆய்வு பார்வையில் (ஆய்வு ஆய்வாளரின்):

On EMI Technology Solutions Limited

(முன்னர் OnEMI Technology Solutions Private Limited) என்பது இந்தியாவில் கடன் வசதிகளைப் பெறுவதில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வரும் ஒரு முன்னணி டிஜிட்டல் கடன் வழங்கும் தளமாகும்.இந்நிறுவனத்தின் நிதி மற்றும் அடிப்படைச் செயல்பாட்டு அளவீடுகள் (financial & fundamental parameters) ஒட்டு மொத்தமாகச் சிறப்பாக உள்ளன. இது புதிதாகப் பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்பதால், அவ்வப்போது இதன் செயல்பாடுகளை மறுஆய்வு செய்வது அவசியமாகும். எனது ஆய்வின்படி, நடுத்தர கால (9 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) மற்றும் நீண்ட கால (24 முதல் 36 மாதங்கள் வரை) முதலீட்டிற்கு இது ஏற்றதாகத் தோன்றுகிறது. நடுத்தர காலத்தில் இதன் பங்கு விலை ரூபாய்490-க்கு மேல் செல்லக்கூடும்; நீண்ட காலத்தில் ரூபாய்680-க்கு மேல் செல்லலாம் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

## சிறப்புப் பகுதி

## முதலீட்டாளர்களுக்கான பார்வை

### இந்த மாத சிறப்புக் கட்டுரை

மல்டிபேக்கர் பங்குகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?




முதலீடு செய்த தொகையை விட 2 மடங்கு, 5 மடங்கு அல்லது 10 மடங்கு வரை அதிக வருமானம் தரக்கூடிய 'மல்டிபேக்கர்' (Multi-bagger) பங்குகளைக் கண்டறிவது என்பது ஒவ்வொரு முதலீட்டாளரின் கனவாக இருந்து வருகிறது.

இத்தகைய பங்குகள் அரிதாகத் தோன்றினாலும், அவை சில குறிப்பிட்ட மற்றும் கணிக்கக்கூடிய நடைமுறைகளைக் கொண்டுள்ளன; சரியான சரிபார்ப்புப் பட்டியலைப் (checklist) பயன்படுத்துவதன் மூலம் அவற்றை முன்கூட்டியே கண்டறிய முடியும்.

தங்கள் செல்வத்தை விரைவாகவும் பாதுகாப்பாகவும் பெருக்க விரும்பும் புத்திசாலித்தனமான சில்லறை முதலீட்டாளர்களுக்காகவே வடிவமைக்கப்பட்ட, முழுமையான 'மல்டிபேக்கர்' பங்குத் தேர்வு வழிகாட்டி மற்றும் சரிபார்ப்புப் பட்டியல் இங்கே விளக்கப்பட்டுள்ளது.




**'மல்டிபேக்கர்' (Multi–Bagger) பங்குகள் என்றால் என்ன?**

'மல்டிபேக்கர்' என்பது உங்கள் முதலீட்டைப் பல மடங்கு பெருக்கிக் கொடுக்கும் ஒரு பங்காகும்:

2 மடங்கு = டபுள்–பேக்கர் (Double–Bagger)

5 மடங்கு = ஃபைவ்–பேக்கர் (Five–Bagger)

10 மடங்கு = டென்–பேக்கர் (Ten–Bagger)

50 மடங்கு = மெகா மல்டிபேக்கர் (Mega–Multi–Bagger)

**இத்தகைய பங்குகள் பெரும்பாலும் பின்வரும் சூழல்களைக் கொண்ட துறைகளிலிருந்து வருகின்றன:**

வளர்ச்சி வேகம் அதிகரித்து வருதல்

போட்டி குறைவாக இருத்தல்

புதுமையான கண்டுபிடிப்புகள் அத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.

**மல்டிபேக்கர் பங்குகளைக் கண்டறிய 2026 ஏன் ஒரு சிறந்த ஆண்டாகும் 2026–ல் வலுவான வளர்ச்சி வாய்ப்புகள் காணப்படும், ஏனெனில்:**


இந்தியா ஒரு உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்தல்

மின்சார வாகனங்கள், செயற்கை நுண்ணறிவு, தானியக்கம், நிதிமயமாக்கல் ஆகியவற்றின் எழுச்சி

ஆற்றல் மற்றும் உள்கட்டமைப்பில் பெரிய சீர்திருத்தங்கள்

வலுவான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கணிப்புகள்

இந்தச் சூழல், ஆரம்பகால மல்டிபேக்கர் பங்குகளை அடையாளம் காண மிகவும் உகந்ததாகும்.



## முழுமையான மல்டிபேக்கர் சரிபார்ப்புப் பட்டியல்:

எதிர்கால மல்டிபேக்கர்களைக் கண்டறிவதற்கான உங்கள் எளிய ஆனால் சக்திவாய்ந்த சரிபார்ப்புப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. வலுவான வருவாய் வளர்ச்சி (15–30% CAGR)

'மல்டிபேக்கர்' (Multi–Bagger) பங்கு என்பது பொதுவாக, தொடர்ந்து விற்பனை வளர்ச்சியைப் பதிவு செய்யும் ஒரு நிறுவனத்தைச் சார்ந்ததாகவே இருக்கும்.

### இது ஏன் முக்கியம்?

வருவாய் வளர்ச்சி என்பது அந்நிறுவனத்தின் தயாரிப்பு அல்லது சேவைக்கு அதிக தேவை இருப்பதைக் குறிக்கிறது.

இது வாடிக்கையாளர்களுக்கு அந்நிறுவனத்தின் மீதுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

விற்பனை வேகம் (sales momentum) இல்லாமல் எந்தவொரு நிறுவனமும் 'மல்டிபேக்கர்' நிலையை அடைவதில்லை.

### எதைச் சரிபார்க்க வேண்டும்?

கடந்த 5–7 ஆண்டுகளுக்கான வருவாய் CAGR (கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதம்).

15%–க்கும் அதிகமான காலாண்டு வாரியான ஆண்டுக்கு–ஆண்டு (YOY) வளர்ச்சி.

குறிப்பு: ஒரே நேரத்தில் ஏற்படும் திடீர் உயர்வுகளைத் தேடாமல், எப்போதும் நிலையான வளர்ச்சியையே கவனிக்க வேண்டும்.

### 2. வருவாய் வளர்ச்சியை விட லாப வளர்ச்சி அதிகமாக இருத்தல்

வருவாய் 20% வளர்ந்து, லாபம் 30– ௪௦% வளர்ந்தால், அதன் பொருள்:

அதிகரிக்கும் லாப வரம்புகள்
அதிக விலை நிர்ணய சக்தி
சிறந்த செலவுக் கட்டுப்பாடு
சரிபார்க்க வேண்டியவை?
ஒவ்வொரு ஆண்டும் நிகர லாப வரம்பு (NPM) மேம்படுதல்
வரிக்குப் பிந்தைய லாபம் (PAT) க௨ – ௨௦% க்கு மேல் வளர்ச்சி
குறிப்பு: இது ஒரு உன்னதமான மல்டிபேக்கர் சமிக்ஞையாகும்.

## 3. குறைந்த கடன் அல்லது கடன் இல்லா நிலை

'மல்டிபேக்கர்' (Multi–Bagger) நிறுவனங்கள் கடன் வாங்கிய பணத்தைப் பயன்படுத்தாமல், தங்கள் சொந்த நிதியைக் கொண்டே வளர்ச்சியை அடைகின்றன.

### இவை ஏன் முக்கியமானவை?

குறைந்த கடன் → குறைந்த நிதிசார் ஆபத்து
நிறுவன விரிவாக்கத்திற்கு அதிக நிதி கிடைக்கிறது
வட்டிச் சுமை குறைவாக இருக்கும்

### எவற்றைக் கவனிக்க வேண்டும்?

கடன்–பங்கு விகிதம் (Debt–to–Equity Ratio – D/E) 0.5–க்குக் குறைவாக இருத்தல்

கடந்த 3–5 ஆண்டுகளாகக் கடன் அளவு குறைந்து வருதல்

குறிப்பு: கடன் இல்லாத நிறுவனங்கள் வேகமாக வளர்ச்சியடைகின்றன (கூட்டு வளர்ச்சி).

## 4. அதிக புரமோட்டர் பங்குகள் (50%க்கு மேல்)

அதிக புரமோட்டர் பங்குகள் = அதிக நம்பிக்கை.
புரமோட்டர்கள் நிறுவனத்தில் முழு ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும்.

### இவை ஏன் முக்கியம்?

புரமோட்டர்களிடமிருந்து அதிக நம்பிக்கை

மோசடிக்கான குறைந்த வாய்ப்பு

நீண்ட கால செல்வ உருவாக்கும் மனப்பான்மை

### சரிபார்க்க வேண்டியவை?

புரமோட்டர் பங்குகள் > 50%

பங்குகளை அதிக அளவில் அடமானம் வைக்காமல் இருப்பது

குறிப்பு: பலமடங்கு லாபம் தரும் பங்குகளைக் கண்டறிவதற்கான மிக வலிமையான அறிகுறிகளில் இதுவும் ஒன்றாகும்.

## 5. பெரிய வளர்ச்சி சாத்தியமுள்ள ஸ்மால்–கேப் அல்லது மிட்–கேப் பங்குகள்

பெரும்பாலான மல்டிபேக்கர் பங்குகள் சிறிய அளவில் தொடங்குகின்றன.

### சிறந்த வரம்பு:

சந்தை மூலதனம் < ₹10,000கோடி

தொழில்துறையில் சாதகமான சூழல்

குறிப்பு: வணிகம் விரிவடையும்போது இந்தப் பங்குகள் 5 முதல் 20 மடங்கு வரை வளரும்.

## 6. முன்கூட்டியே போக்கைக் கண்டறிதல் (துறை சார்ந்த சாதகமான சூழல்கள்)

வேகமாக வளரும் துறைகளைக் கவனியுங்கள்.

மின்சார வாகனங்கள் (EV சூழலமைப்பு)

பசுமை ஆற்றல் மற்றும் புதுப்பிக்கத்தக்கவை

பாதுகாப்பு உற்பத்தி

ரயில்வே மற்றும் உள்கட்டமைப்பு

டிஜிட்டல் பணம் செலுத்துதல் மற்றும் ஃபின்டெக்

செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியக்கம்
சிறப்பு இரசாயனங்கள்
மருந்து API உற்பத்தி
குறிப்பு: தொழில்துறை வளர்ந்தால், நிறுவனமும் தானாகவே வளரும். மல்டிபேக்கர் முதலீட்டாளர்கள் இந்தப் போக்கை முன்கூட்டியே கண்டறிகிறார்கள்.

### 7. தனித்துவமான தயாரிப்பு அல்லது போட்டி நன்மை

பலமடங்கு லாபம் தரும் ஒரு நிறுவனத்திடம் பின்வருவன இருக்க வேண்டும்:
போட்டியாளர்கள் எளிதில் நகலெடுக்க முடியாத ஒரு தயாரிப்பு
தொழில்நுட்ப நன்மை
வலுவான பிராண்ட் விசுவாசம்
விநியோகஸ்தர் வலையமைப்பு
காப்புரிமைகள் அல்லது உயர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D)
குறிப்பு: இது ஒரு நீண்ட காலப் பாதுகாப்பு அரணை உருவாக்குகிறது.

### 8. உயரும் வருவாய் விகிதங்கள் (ROE, ROCE)

இந்த விகிதங்கள், ஒரு நிறுவனம் முதலீட்டாளர் மற்றும் வணிக மூலதனத்தை எவ்வளவு திறம்படப் பயன்படுத்துகிறது என்பதை அளவிடுகின்றன.

### இது ஏன் முக்கியம்?

மல்டிபேக்கர் பங்குகள் எப்போதும் சிறந்த மூலதனத் திறனைக் கொண்டிருக்கும்
உயர் ROE/ROCE என்பது சிறந்த நிர்வாகச் செயல்திறனைக் குறிக்கிறது

**என்ன சரிபார்க்க வேண்டும்?**

ROE (பங்கு மீதான வருவாய்) > 15%
ROCE (பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான வருவாய்) > 15%
குறிப்பு: இரண்டும் சீராக மேம்படுதல்

**9. நியாயமான மதிப்பீடுகள் (அதிக விலையிடப்படாதவை)**

ஒரு வலுவான நிறுவனம் கூட அதிக மதிப்பீடுகளில் வாங்கப்பட்டால், அது ஒரு மல்டிபேக்கராகத் தோல்வியடையும்.

**கவனிக்க வேண்டியவை:**

தொழில்துறை சராசரியை விடக் குறைவான P/E
விலை–விற்பனை விகிதம் < 5
PEG விகிதம் < 1 (சிறந்த அறிகுறி)
குறிப்பு: சிறந்த நிறுவனங்களை நியாயமான விலையில் வாங்குங்கள்– விலையுயர்ந்த நிறுவனங்களை அல்ல.

**10. வலுவான நிர்வாகம் மற்றும் ஆளுகை**

மல்டிபேக்கர் பங்குகளுக்கு நம்பகமான தலைமை தேவை.

**சரிபார்க்கவும்:**

மோசடி வழக்குகள் இல்லை
வெளிப்படையான அறிக்கையிடல்
நிலையான விரிவாக்க உத்தி
அடிக்கடி பங்கு நீர்த்தல் இல்லை
குறிப்பு: நல்ல நிர்வாகம் = நீண்ட கால கூட்டு வளர்ச்சி.

**11. அதிக செயல்பாட்டு பணப்புழக்கம்**

லாபங்கள் உண்மையான பணத்தால் ஆதரிக்கப்பட வேண்டும்.

**எப்போதும் சரிபார்க்கவும்:**

நிகர லாபத்தை விட செயல்பாட்டு பணப்புழக்கம் வேகமாக உயர்கிறது
பெரிய நிலுவையில் உள்ள பெறத்தக்கவைகள் இல்லை
குறிப்பு: பொருளாதார மந்தநிலையின் போது தாக்குப்பிடிக்கிறது, பணமே ராஜா.

**12. பெரிய அணுகக்கூடிய சந்தை (TAM)**

மல்டிபேக்கர்கள் வளர்கின்றன, ஏனெனில், அவற்றுக்கு பரந்த விரிவடையும் சந்தை உள்ளது.

குறிப்பு: ஒரு சிறிய பிரிவில் உள்ள ஒரு நிறுவனம் ஒருபோதும் 10 மடங்கு பங்காக மாற முடியாது.

**13. ஆரம்ப நிலை வளர்ச்சி + வலுவான எதிர்கால பார்வை**

பின்வருவனவற்றைத் தெளிவாக விளக்கும் நிறுவனங்களைத் தேடுங்கள்:

வணிகம் எங்கு செல்கிறது
புதிய தயாரிப்பு அறிமுகங்கள்
புதிய சந்தைகள்
நவீனமயமாக்கல் மற்றும் தானியங்குமயமாக்கல்
உலகளாவிய விரிவாக்கம்
குறிப்பு: முன்னோக்கி சிந்திக்கும் நிறுவனங்கள் பெரும் வருமானத்தை உருவாக்குகின்றன.

**கூடுதல் தகவல்: ஆரம்பகால மல்டிபேக்கர் பங்குகளின் சமிக்ஞைகள்**

ஒரு பங்கு மல்டிபேக்கராக மாறுவதற்கு முன்பு இந்த மறைந்திருக்கும் சமிக்ஞைகள் பெரும்பாலும் தோன்றும்:

நிறுவனர்கள் பங்குகளை அதிகரித்தல்

வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (FIIs) பங்குகளைக் குவிக்கத் தொடங்குதல்

விற்பனை, லாபம் போன்ற காலாண்டு முடிவுகள் மேம்படுதல்

பெரிய மூலதனச் செலவுத் திட்டங்கள் அறிவிக்கப்படுதல்

புதிய தலைமைச் செயல் அதிகாரி அல்லது புதிய தலைமை

நீண்டகாலமாக பலப்பட்டு அதிக வர்த்தக அளவுடன் தடுப்பை மீறிய விலையேற்றம்

**கடந்தகால இந்திய மல்டிபேக்கர் பங்குகளின் எடுத்துக்காட்டுகள்:–**

டாடா எல்எக்ஸி – 10 ஆண்டுகளில் 30 மடங்கு வளர்ச்சி

டிக்சன் டெக்னாலஜிஸ் – பட்டியலிடப்பட்ட பிறகு மிகப்பெரிய வருமானம்

தீபக் நைட்ரைட் – 5 ஆண்டுகளில் 15 மடங்கு வளர்ச்சி

பாலாஜி அமீன்ஸ் – ஸ்மால்கேப் → மல்டிபேக்கர்

அவென்யூ சூப்பர்மார்ட்ஸ் (டிமார்ட்) – வலுவான கூட்டு வளர்ச்சி

கியூபிட் லிமிடெட் – 4 ஆண்டுகளில் 94 மடங்கு வளர்ச்சி

மேலே உள்ள சரிபார்ப்புப் பட்டியலில் உள்ள அனைத்து அம்சங்களும் ஆரம்பத்திலேயே இவர்களிடம் இருந்தன.

**இறுதிச் சிந்தனைகள்,**

ஒரு மல்டிபேக்கர் பங்கைக் கண்டுபிடிப்பது அதிர்ஷ்டம் அல்ல – அது ஒரு ஒழுக்கம்.

**ஒரு சிறந்த மல்டிபேக்கர் எப்போதும் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்:**

வலுவான எண்கள்

வலுவான நிர்வாகம்

வலுவான தொழில் துறை

வலுவான நீண்ட கால தொலைநோக்குப் பார்வை

**மேலே உள்ள சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்தினால், சாதாரண முதலீட்டாளர்களை விட நீங்கள் வெகுவாக முன்னிலையில் இருப்பீர்கள்.**

**இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில்**
**குறுகிய கால பங்குகள்:**

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **Anant Raj Ltd NSE:**
**ANANTRAJ... CMP - 622 ₹ Entry 610 ₹ to 620 ₹**
**Add more around Till 550 ₹ Target 700 ₹ and 770 ₹**

2, **ITC Ltd, NSE: ITC -**
**Entry 280 – 285, Accumulate on downside More and More till 260.**
**Target 1 – 300, Target 2 – 320.**

3, **Castrol India Ltd NSE: CASTROLIND... CMP - 183 ₹**
**Entry 180 ₹. to 185 ₹ Add more on down. Till 160 ₹**
**Target 210 ₹ and 230 ₹**

4, **Tata Motors Passenger Vhcls Ltd NSE: TMPV...**
**CMP - 340 ₹ Entry 330 ₹ to 335 ₹ Add more on down Till 300 ₹**
**Target 360 ₹ and 390 ₹**

5, Wipro Ltd NSE: WIPRO... CMP - 183 ₹ Entry 180 ₹ to 185 ₹
Add more on down Till 160 ₹ Target 200 ₹ and 220 ₹

1, NMDC Ltd NSE: NMDC... CMP - 85 ₹ Entry 80 ₹ to 85 ₹
Add more on down Till 70 ₹. Target 95 ₹ and 110 ₹

## பொறுப்புத் துறப்பு

இந்தக் கட்டுரையின் ஆசிரியர்கள் SEBI–யில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர்கள் (Research Analysts) அல்லர். இங்கு பகிரப்படும் வரைபடங்கள் (Charts), விலை நிலைகள் (Levels), பங்குகள் (Stocks) மற்றும் கருத்துகள் அனைத்தும் ஆசிரியர்களின் தனிப்பட்ட ஆய்வு மற்றும் பார்வையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

இத்தகவல்கள் ஆய்வுத் தகவல்களைப் பகிர்வதற்காக மட்டுமே; பங்குகளை வாங்கவோ, விற்கவோ அல்லது எந்தவொரு வர்த்தக நடவடிக்கையிலும் ஈடுபடவோ இது பரிந்துரையாகவோ அல்லது முதலீட்டு ஆலோசனையாகவோ கருதப்படக் கூடாது.

இத்தகவல்களின் அடிப்படையில் ஒருவர் மேற்கொள்ளும் எந்தவொரு முதலீடு அல்லது வர்த்தக முடிவும் அவரவர் சொந்த முடிவும் பொறுப்பும் ஆகும். அதன் மூலம் ஏற்படும் லாபம் அல்லது இழப்புகளுக்கு கட்டுரையாளர்களோ, 'நாம் நகரத்தார்' மின்னிதழோ பொறுப்பேற்காது. இது தொடர்பாக எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

முதலீட்டு முடிவுகளை எடுக்கும் முன், வாசகர்கள் தங்களது சொந்த ஆய்வை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# ஜாதகத்தில் மறைந்திருக்கும் பூர்வ புண்ணிய ரகசியம்



–ஜோதிடர் எல்லி
9894176494



நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுக்கு வணக்கம்!

"அண்டத்தில் உள்ளது பிண்டம், பிண்டத்தில் உள்ளது அண்டம்" என்பது பிரபஞ்சத்திற்கும் (அண்டம்) மனித உடலுக்கும் (பிண்டம்) இடையே உள்ள ஒற்றுமையைக் குறிக்கும் ஆழமான தத்துவமாகும்.

இந்த பூமியில் நாம் நமக்காக விதிக்கப்பட்டவைகளைத் தான் அனுபவித்து வருகிறோம்.

மனம் என்பது நமக்கு புதிய தேடல், புதிய முயற்சிகளை மேற்கொள்ள தூண்டுகிறது நாம் அதன் வழிச் சென்றாலும் சுப பலன்களை பெறுவதற்கு முற்பிறப்பில் உள்ள பாவ புண்ணிய சேர்க்கைகள் தான் தீர்மானிக்கிறது.ஆக இறுதியில் வினைப்பயனே வெல்கிறது எனலாம்.

இந்த வகையில் வினைப்பயன் அல்லது கன்மம் பற்றி அறிய நாம் ஜாதகத்தில் பூர்வ புண்ணியம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பூர்வ புண்ணியம் பல்வேறு விசயங்களுக்கு திறவுகோல் என்பதை முன்னர் ஒரு கட்டுரையில் கண்டோம். எனவே இதில் முக்கியமாக பூர்வீகச் சொத்துகளை பெறுவது அதனைக் அனுபவிப்பது எப்படி என்பதை பார்க்கலாம் வாருங்கள்.

பூர்வீக சொத்துக்கள் என்பது நாம் கண்ணால் காணும் புறத்தே உள்ள பொருட்கள் மட்டுமே அல்ல. சூட்சுமமாக உள்ள ஆத்ம பலன், அறிவு மெய்ஞானம் புத்திக் கூர்மை யும் தான்.

ஜாதகத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானம் என்பது லக்னத்திற்கு ஐந்தாம் வீடு ஆகும். இந்த வீட்டிற்கு காரகன் குரு பகவான் ஆவார்.

கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்க புதன் பகவான்.
நிலம்,அசையா சொத்துக்களை பொறுத்தவரை செவ்வாய் பகவான் காரகர் வீடு ,வாகனம்,கலை மற்றும் ஆடம்பர விசயங்களுக்கு சுக்கிரன்.



முன்னோர்களின் அசையா சொத்துக்கள் என்பவை நிலங்கள், தோட்டங்கள்,வீடுகள்,கடைகள், கட்டிடங்கள், கார்கள், நகைகள், ஃபர்னிச்சர், புத்தகங்கள், துணிகள்,அரிய பொருட்கள் என பலதரப்பட்ட வகைகளில் அடங்கும் அல்லவா

**மேற்கண்டவைகளில் எவையெல்லாம் ஜாதகருக்கு கைகூடும் எல்லாமே கிட்டுமா? அல்லது குறிப்பிட்ட சிலவகை கிடைத்து மற்றவை கிடைக்காமல் போகுமா?**

சில ஜாதகர்களுக்கு தந்தை பாட்டன் சொத்துக்கள் எதுவுமே ஏன் கிடைக்காமல் போகிறது ஒரு சிலருக்கு மட்டும் தானாகவே எளிதாக கிடைத்து விடுகிறதே எப்படி இவற்றையும் இந்த கட்டுரையையில் அலசுவோம்.

ஐந்தாம் பாவகம் சுபத்துவம் பெற வேண்டும் .
அப்படி இருப்பின் பூர்வீக சம்மந்தப்பட்ட சொத்துக்கள் வந்து சேரும்.

அதற்கான கிரக அமைப்புகள் :




ஐந்தாம் அதிபதி பாக்கிய ஸ்தானமான 9 ல் அமர்ந்து இருக்க வேண்டும் கூடவே குரு பார்வை யில் இருப்பது அவசியம். ஐந்தாம் இடத்தை பாக்கிய ஸ்தானத்தில்(9ல்) இருந்து குரு பார்வை செய்வது.

நான்கு மற்றும் ஐந்தாம் இட பரிவர்த்தனை ஜாதகத்தில் இருப்பதும் முன்னோர்கள் சொத்துக்கள் முழுமையாக கிடைக்க உதவும்.

நான்கு மற்றும் ஐந்தாம் அதிபதிகள் இணைந்து 9 ம் இடத்தில் அமர்ந்து இருக்கும் போதும் தந்தை வழி சொத்துக்கள் ஜாதகருக்கு குறைவில்லாமல் சேர்ந்து விடும்.

9 மற்றும் 4 ம் அதிபதிகள் இணைந்து 5ம் வீட்டில் அமர்ந்து இருந்தாலும் பூர்வீக ஆஸ்திகள் ஜாதகருக்கு கைகூடும்.

## எந்த கிரக நிலைப்படி பூர்வீகச் சொத்துகளை கிடைக்காமல் போகிறது!?

ஐந்தில் பாவிகள் அமர்வதும் அவர்கள் லக்ன அசுபராக இருக்கும் சூழலில் தான் ஜாதகருக்கு கர்ம வினைப்படி பூர்வ நற் பலன்கள் ஜாதகர் இழந்து விடுகிறார்.

இயற்கை முழு பாவ கிரகங்கள் என்பது சனி, செவ்வாய், சூரியன், ராகு கேதுக்கள் முதலியவை ஆகும். இந்த பாவர்கள் ஐந்தாம் பாவகத்தில் இருந்தால் பூர்வீக சொத்துக்களை அடைய முடிவதில்லை!

எடுத்துக்காட்டாக ஒருவர் ஜாதகத்தில் ஐந்தாம் வீட்டில் ராகு மற்றும் சனி அமரும்போது, ராகு செவ்வாய் இணைந்து அமரும்போதும் பூர்வீக சொத்து இல்லாமல் போகிறது.

ஐந்தாம் அதிபதி 12ல் மறைந்து ஐந்தில் ராகு அல்லது கேது, சனி நிற்கும் போது பூர்வீக சொத்துக்களை ஜாதகரின் தந்தையோ அல்லது அவருக்கு முந்தைய தலைமுறையினரோ விற்று காலி செய்து இருப்பார்கள்.ஜாதகருக்கு எதுவுமே இல்லாமல் இருக்கும்.

ஐந்தாம் அதிபதி எட்டில் மறைந்து ஐந்தில் கேது தனித்து அமர்ந்தாலும் பூர்வீக சொத்து கிடையாது.

எட்டாம் அதிபதி ஐந்தில் அமர்ந்து லக்னாதிபதி 12 ம் அதிபதியின் நட்சத்திர சாரத்தில் நின்றாலும் பூர்வீக சொத்துக்களை பெற முடியாது.

ராசி மற்றும் லக்னத்திற்கு குரு பார்வை இல்லாமல் ஐந்தாம் அதிபதி ஆறில் மறைந்து நான்காம் அதிபதி 12ல் அமர்ந்த நிலையில் ஜாதகருக்கு வீடு சொத்துக்கள் கிடைப்பதில்லை.

நான்காம் அதிபதி மற்றும் ஐந்தாம் அதிபதி இருவரும் தங்கள் ஸ்தானத்திற்கு 12 ம் இடத்தில் போய் அமரும் போது பூர்வீக சொத்துக்களை பெறுவதில் தடை உண்டாகும்.

சனி பகவான் நான்காம் இடத்தையோ, ஐந்தாம் இடத்தையோ பார்வை செய்யும் போது பூர்வீக சொத்துக்களை பெற நிரந்தர தடங்கள் இருக்கும்.

பூர்வீக சொத்துக்களுக்கு ஐந்தாம் இடம் மட்டுமல்லாது அந்தந்த காரக கிரங்களும் சுபத்துவம் வேண்டும்.

## நிலபுலன்கள் மற்றும் சொத்துக்கள் இல்லாமல் முன்னோர்களின் வேறு நற்பலன்களை மட்டும் பெறுவது எப்படி?




லக்னம் மற்றும் செவ்வாய் வலுத்து ஐந்தாம் இடத்தோடு சம்மந்தம் கொள்ளும் போது முன்னோர்களின் ஆற்றல்,ரத்த உறவுகளின் ஆதாயம், வலிமையான உடற்கட்டு இவைகள் ஜாதகருக்கு இருக்கும்.

லக்னாதிபதி மற்றும் குரு பகவான் வலு ஜாதகத்தில் இருக்குமானால் முன்னோர்களின் இறையுணர்வு, நல்ல புத்திரபாக்கியம், சமயோசித எண்ணம், ஆன்மீக பயணங்கள் மேற்கொள்வது, தத்துவ வகுப்புகள் நடத்துவது,முன்னேச்சரிக்கை உணர்வுகள் இவைகள் ஜாதகருக்கு உண்டு. முன்னோர்களின் புத்தகங்கள், புத்தக அலமாரி, மேஜை, தாத்தாவின் படிப்பு நாற்காலிகள் கிடைக்கும்.


ஐந்தாம் அதிபதி கேந்திரங்களில் நின்று
லக்னாதிபதி மற்றும் சுக்கிரன் வலுவான நிலையில் இருக்கும் போது கலையுணர்வு, கலைப் படைப்புகள் உருவாக்குவது, நல்ல குடும்பம் அமைவது ஜாதகருக்கு ஏற்படும். முன்னோர்களின் கலைப்பொருட்கள் கிடைக்கும்.

புதன் வலுப்பெற்ற ஜாதகர்கள் குடும்பத்தின் பூர்வீக சொத்தாக எழுத்தாற்றல், நயம்பட பேசுவது, தகவல் தொழில்நுட்பம், பல்வேறு விசயங்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் இவற்றைப் பெறுவார்கள். முன்னோர்களின் எழுதுகோல், புத்தங்கள், ஜாதக்குறிப்புகள், கணிதத் திறன் இவைகள் ஜாதகருக்கு வந்து சேரும்.

கேது ஐந்தாம் இடத்தோடு சம்மந்தம் கொள்ளும் ஜாதகர்களுக்கு உள்ளுணர்வு ஆற்றல்,தவ வலிமை, சகிப்புத்தன்மை, நடக்கப் போவதை கணிக்கும் ஆற்றல் இவைகள் தான் பூர்வீக சொத்துக்களாகும்.

இதுவரையில் பூர்வீக சொத்துக்களை பெறுவதில் கிரகங்கள் எப்படி உதவுகின்றன என்பதை பார்த்தோம். மீண்டும் இதன் தொடர்சியை அடுத்த கட்டுரையில் காண்போம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி
சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர்
தொடர்புக்கு : 9894176494



# தேவகோட்டையைச் சேர்ந்த மலேசிய வாழ் நகரத்தாருக்கு கௌரவ டாக்டர் பட்டம்



மலேசியாவின் கோலாலம்பூரில் வசித்து வரும், தேவகோட்டையைச் சேர்ந்த திரு.பெ.இராமன் செட்டியார் அவர்கள், கல்வி மற்றும் சமூகப் பணிக்காக கௌரவ டாக்டர் பட்டம் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட உலக கல்வி மற்றும் சாதனையாளர்களின் விருது நிறுவனம் சார்பில், புதுதில்லி அரசியல் சாசனக் கிளப்பில் 15.07.2026 அன்று நடைபெற்ற விழாவில், மலேசியாவில் அவர் ஆற்றி வரும் கல்வி மற்றும் சமூகப் பணிகளைப் பாராட்டி இந்த உயரிய கௌரவம் வழங்கப்பட்டது.

இவ்விருதை ஜார்க்கண்ட் மாநில முன்னாள் தலைமை நீதிபதி நீதியரசர் எம். கற்பக விநாயகம் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் புதுதில்லி ஆர்.கே.புரம் சட்டமன்ற உறுப்பினர் அனில் குமார் சர்மா, தில்லி முத்தமிழ்ப் பேரவையின் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மலேசிய மண்ணில் வாழ்ந்தாலும், தாயகத்தின் பெருமையை உயர்த்தி வரும் திரு.பெ.இராமன் செட்டியார் அவர்களுக்கு 'நாம் நகரத்தார்' இதழின் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட
இதழின் மின்னஞ்சல் முகவரி
naamnagarathar@outlook.com
அல்லது
96590 32994 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com